Registered as a Newspaper

பக்கங்கள் 16

விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 108

புதன்கிழமை
13 மார்ச் 2024

மாசி 30 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



"இப்பிடி தனிக்குழுக்களை அமைச்சு தாலாட்டுப்பாடுற விளையாட்டு பழகிப்போட்டுது பாருங்கோ"



வெடுக்குநாறிமலை விவகாரம்;

# தொல்லியல் திணைக்களம் இறுக்குகின்றது வழக்கை!

## கைதானோருக்கு விளக்கமறியல் நீடிப்பு! நீதிமன்றின் முன்பாக உறவுகள் கண்ணீர்

**வவுனியா, மார்ச் 13**

**வவுனியா வடக்கு, வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் சிவராத்திரி வழிபாடுகளின்போது கைதுசெய்யப்பட்ட ஆலயப் பூசகர் உள்ளிட்ட எண்மரின் விளக்கமறியல் எதிர்வரும் 19ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.**

15

வட்டுக்கோட்டை கொலை;

# அடைக்கலம் கேட்ட எம்மை அடித்துவிரட்டிய கடற்படை!

## துப்பாக்கியாலும் தாக்கினார்கள் இறந்தவரின் மனைவி நேற்றுக் கதறல்

யாழ்ப்பாணம், மார்ச் 13

"உயிரைக் காப்பாற்றும்படி கெஞ்சிய எம்மைக் கடற்படை காப்பாற்றியிருந்தால் என் கணவர் கொலையுண்டிருக்க மாட்டார். என் கணவரின் சாவுக்கு கடற்படையும் ஒரு காரணம்" - இவ்வாறு குற்றம் சாட்டியுள்ளார் வட்டுக்கோட்டையில் நேற்றுமுன்தினம் இரவு, படுகொலை செய்யப்பட்டவரின் மனைவி.

காரைநகரில் இருந்து வந்த இளம் தம்பதியரைக் கார்களில் கடத்திய கொலைகாரக் கும்பல் ஒன்று, கணவரை வெட்டியும், குத்தியும் படுகொலை செய்தது. மனைவியை வீதியில் தள்ளிவிட்டுத் தப்பித்துச் சென்றது.

15

# கூரிய ஆயுதத்தால் குத்தியே இளைஞர் கொல்லப்பட்டார்!

## உடற்கூற்று அறிக்கையில் தகவல்

யாழ்ப்பாணம், மார்ச் 13

யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டைப் பகுதியில், வாள்வெட்டுக்கு இலக்கான இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்த நிலையில், அவர் கூரிய ஆயுதங்களால் வதைத்துச் சித்திரவதை செய்யப்பட்ட பின்னரே கொல்லப்பட்டுள்ளார் என்று நேற்று அறிக்கையிடப்பட்டுள்ளது.

15

## வெடுக்குநாறிமலை விவகாரம் விசாரிப்பதற்குத் தனிக்குழு!

பக்.15

இந்தியாவில்

## ஈழத்தமிழர்களுக்கு குடியுரிமை மறுப்பு!

மீண்டும் ஓரவஞ்சனை

பக்.15



வடக்கின்

# பிரதம செயலராக இளங்கோவன்!

## நியமனக்கடிதம் நேற்று வழங்கி வைப்பு

கொழும்பு, மார்ச் 13

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால், வடமாகாண பிரதம செயலாளராக எல். இளங்கோவனும், வடமேல் மாகாண பிரதம செயலாளராக தீபிகா கே. குணரத்னவும் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கான நியமனக்

15









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோசடியாளரை விரட்டுவதே நாட்டுக்கு பொருளாதார மீட்சி



## ஜனக ரத்நாயக்க தெரிவிப்பு

**கொழும்பு, மார்ச் 13**
**ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தகைமை என்னிடமுள்ளது. என்னை விடத் தகைமையானவர் போட்டியிட்டால் நான் அவருக்கு நிபந்தனையற்ற வகையில் ஒத்துழைப்பு வழங்குவேன் .**

-இவ்வாறு தேசிய சிவில் அமைப்பு முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளரும், பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவருமான ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது: வங்குரோத்து நிலைக்கு 225 உறுப்பினர்களும் பொறுப்புக்கூற வேண்டும். நாட்டு மக்கள் இவர்களை முழுமையாகப் புறக்கணிக்கவேண்டும். நாட்டு மக்கள் முறைமை மாற்றத்தை எதிர்பார்க்கவில்லை. 'முறைமை பரிமாற்றத்தை' எதிர்பார்க்கிறார்கள். பொருளாதார மீட்சிக்கான திட்டங்களை நாங்கள் இந்த மாதம் வெளியிடுவோம். மோசடியாளர்களை அப்புறப்படுத்தாமல் சிறந்த மாற்றத்தை எதிர்பார்க்க முடியாது.

பொருளாதாரப் பாதிப்பில் இருந்து மீளும் நடவடிக்கைகளை செயற்படுத்தும் போது மக்களின் பசியைப் போக்கும் கொள்கையை நிலையாக செயற்படுத்துவோம்.

இந்த ஆண்டு இடம்பெறவுள்ள தேசியதேர்தல்கள்தீர்மானம்மிக்கன - என்றார். (ச-இ)

# பொருளாதாரக் காயத்துக்கு மருந்திடுகின்றார் ரணில்!

## ஐ.தே.க. கூறுகின்றது

கொழும்பு, மார்ச் 13
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்னும் சில நாள்களில் நாட்டின் பொருளாதாரக் காயத்தை முற்றாக ஆற்றுவார் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும், ஜனாதிபதியின் காலநிலை மாற்றம் தொடர்பான சிரேஷ்ட ஆலோசகருமான ருவான் விஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் குளியாபிட்டிய பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,
ரணில் விக்கிரமசிங்க தற்போது நாட்டின் பொருளாதாரத்தின் காயத்தை ஆற்றும் மருந்தைத் தடவி வருகிறார். காயத்துக்கு மருந்து பூசும்போது வலி ஏற்படவே செய்யும்.

எதிர்காலத்தில் பொருளாதாரம் மீளும் போது மக்களுக்கு மேலும் சலுகைகளை வழங்கமுடியும் - என்றார். (ச-இ)

# ரணிலுக்கு லீகுவானின் வலிமை

## எஸ்.பி. புகழாரம்!

கொழும்பு, மார்ச் 13
"சிங்கப்பூரின் சிற்பி லீகுவான், சீனாவில் பொருளாதாரப் புரட்சியை ஏற்படுத்திய டெங்ஷியாபிங் போன்றவர்களுக்கு இருந்த வலிமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இருக்கின்றது" - என்று பொதுஜன பெரமுன கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

"கிளர்ச்சி, அத்துமீறல் என்பவற்றை மிகவும் சிறப்பான முறையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கட்டுப்படுத்தினார். லீகுவான், சீனாவில் பொருளாதார மறுசீரமைப்பை ஏற்படுத்த முற்படுகையில் டெங் ஷியாபிங்கிற்கு எதிராக 5 லட்சம் மாணவர்கள் வீதியில் இறங்கினர். அதனைக் கட்டுப்படுத்தியே பொருளாதார மறுசீரமைப்பை அவர் மேற்கொண்டார். அதனால் தான் சீனா இன்று முன்னேறியுள்ளது. அமெரிக்காவுக்குக் கடன் கொடுக்கும் நிலைமைக்கு வந்துள்ளது" - என்றார். (ம-44)

# ரணில் மாறிவிட்டார்

## பீரிஸ் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 13
"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எனது மாணவன். ஆனால் தற்போது அவர் மாறிவிட்டார். ஓர் ஆசிரியராக இது தொடர்பில் அதிர்ச்சியாக உள்ளது" - என்று சட்டத்துறை பேராசிரியரான நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

குருநாகல், குளியாபிட்டியவில் நடைபெற்ற ஐக்கிய தேசியக்கட்சி கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஜி.எல்.பீரிஸ் மீது கடும் விமர்சனங்களை முன்வைத்தார். ராஜபக்சக்களின் சகா எனவும் போட்டுத் தாக்கியிருந்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது, இது பற்றி பீரிஸிடம் கேள்வி எழுப்பட்டது. இதற்குப் பதிலளித்த பீரிஸ் மேலும் தெரிவித்ததாவது:

"ரணில் விக்கிரமசிங்க எனது மாணவன். பல்கலைக்கழகத்தில் இருக்கும்போது ஒழுக்கமாக இருந்தார். சூழ்நிலைக்கேற்பபேசுவார். ஆனால் குருநாகல் கூட்டத்தில் காட்சிதந்த ரணில் முற்றிலும் மாறுபட்டவர். எல்லோரையும் தாக்கினார். பல்கலைக்கழகத்தில் நான் பார்த்த ரணில் அல்லர் இவர். எனக்கே வியப்பாக இருந்தது. எனினும் நாம் விமர்சனங்களைக்கண்டு பின்வாங்கப் போவதில்லை.

எமது பயணம், திட்டம் வெற்றி என்பதால்தான் விமர்சனம் வருகின்றது" - என்றார். (ம-44)

# ரணிலுடன் இணைந்து பெரமுன செயற்படும்

## அமைச்சர் பவித்திரா தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 13
ஜனாதிபதியுடன் இணைந்து செயற்படுவதில் எமக்கு எவ்வித பிரச்சினையும் இல்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாக பேச்சு நடத்தவுள்ளேன் என்று வனஜீவராசிகள், வன வள பாதுகாப்பு மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனேயே செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம். நான் பெரமுனவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சராகவே அமைச்சரவையில் அங்கத்துவம் வகிக்கின்றேன். இனிவரும் காலங்களிலும் அதில் எந்த மாற்றங்களும் இருக்காது- என்றும் அவர் குறிப்பிட்டார். (எ-இ)




# எயார்லைன்ஸ் 6 மாத காலக்கெடு!

கொழும்பு, மார்ச் 13
ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் தனது செயற்பாட்டு மற்றும் நிதிப் பிரிவுகளின் முன்னேற்றத்தை அடுத்த 6 மாதங்களுக்குள் காட்டமுடியாவிட்டால் சுமார் 6 ஆயிரம் ஊழியர்களின் வேலைகள் நிச்சயமற்றதாக இருக்கும் எனக் கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

விமான சேவையைத் தொடர்ந்து நடத்துவதற்கு பல வர்த்தக வங்கிகள் மற்றும் ஏனைய நிறுவனங்களிடமிருந்து கடனாகப் பெற்ற 1.2 பில்லியன் அமெரிக்க டொலரில் 510 மில்லியன் அமெரிக்க டொலரை மீளச் செலுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அடுத்த ஆறு மாதங்களுக்குள் ஸ்ரீலங்கன் விமான சேவைக்கான மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தை கவர்ச்சிகரமான நிதி இருப்புநிலையுடன் ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (ஏ-இ)

# சம்பிக்க இந்தியா பயணம்



கொழும்பு, மார்ச் 13
ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க இந்தியாவுக்குப் பயணமாகியுள்ளார்.

மிரோசம் சர்வதேச பல்கலைக்கழகத்தின் அழைப்பின் பேரில் அங்கு நடைபெற்ற சுற்றுச்சூழல் மற்றும் நிலையான வளர்ச்சி குறித்த அறிஞர்மாநாட்டின் தொடக்க உரையை ஆற்றுவதற்கு அவர் இந்தியாவுக்குச் சென்றுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# ஆதரவு இல்லை

## உதய கம்மன்பில தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 13
அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க மற்றும் ராஜபக்சக்களுக்கு ஆதரவு வழங்கப் போவதில்லை என்று பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாம் கூட்டணி அமைக்கும்போது தனிநபர்கள், எமக்கு வழங்கப்படும் பதவிகள் என்பன முதன்மை பெறாது. கொள்கைகளை முன்னிலைப்படுத்தியே கூட்டணி அமைக்கப்படும். எமக்கு நபர்கள் முக்கியம் அல்லர், கொள்கைகள்தான் முக்கியம். ரணில் விக்கிரமசிங்க, ராஜபக்சக்களுடன் கூட்டணி அமைக்கத் தயாரில்லை. ஏனெனில் அவர்களின் நடவடிக்கை பற்றி எமக்குத் தெரியும். சஜித், அநுர போன்றவர்கள் இன்னும் நாட்டை ஆளாவிட்டாலும் ரணில், ராஜபக்சக்கள் பல வருடங்கள் ஆட்சியில் இருந்துள்ளனர். அவர்களின் கடந்தகால செயற்பாடுகள் தொடர்பில் எமக்கு நல்ல அனுபவமுள்ளது- என்றார். (எ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்குக



## ஜெய்சங்கருக்கு தமிழக முதலமைச்சர் அவசர கடிதம்

**சென்னை, மார்ச் 13**

**இலங்கைக் கடற்பரப்பில் கைதுசெய்யப்பட்ட 22 தமிழக மீனவர்களையும் உடனடியாக விடுவிப்பதற்கு இராஜதந்திர ரீதியாக நடவடிக்கை எடுக்குமாறு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கருக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.**

தொடர்ச்சியாக இடம்பெறும் கைது சம்பவங்கள் தமிழக மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதித்துள்ளது. அவர்களது குடும்பம் மற்றும் மீனவர்களின் நலன் கருதி அவர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை யாழ்ப்பாணம் - காரைநகர் கடற்பரப்பில் எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட 22 தமிழக மீனவர்களையும் எதிர்வரும் 22ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. (ச-இ)

# விகாரை மீது துப்பாக்கிச்சூடு

கொழும்பு, மார்ச் 13

மஹியங்கனை, தம்பனை, குகுலபொல பிரதேசத்திலுள்ள விகாரை ஒன்றின் மீது நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

விகாராதிபதியின் அறையை இலக்கு வைத்தே இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆயினும் விகாரையிலிருந்த எவருக்கும் காயம் ஏற்படவில்லை. சம்பவம் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

# துப்பாக்கிச் சூட்டால் அதிரும் தென்பகுதி!

கொழும்பு, மார்ச் 13

அம்பலாங்கொடை மற்றும் எல்பிட்டி ஆகிய பகுதிகளில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இரண்டு துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களில் 4 பேர் உயிரிழந்துள்ளதுடன் 6 பேர் காயமடைந்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

பிடிகல, குருவல பிரதேசத்தில் கடையொன்றுக்கு அருகில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இருவர் உயிரிழந்துள்ளனர். மூவர் காயமடைந்துள்ளனர். மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே இந்தத் துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டுள்ளனர்.

அதேவேளை, அம்பலாங்கொடை, கலகொட பிரதேசத்தில் கடையொன்றில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் இருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் மூவர் காயமடைந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் துரிதப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

# 'யுக்திய' உதவிக்கு அலைபேசி எண்

கொழும்பு, மார்ச் 13

'யுக்திய' நடவடிக்கைக்கு இரகசியத் தகவல்களை வழங்குவதற்காக புதிய தொலைபேசி இலக்கம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்மூலம் பொலிஸ் தலைமையகத்தில் ஸ்தாபிக்கப்பட்ட விசேட அதிரடிப் பிரிவை தொடர்புகொள்ளமுடியும்.

அதன்படி 0718598800 என்ற தொலைபேசி இலக்கமும் ops.narcotics@police.gov.lk என்ற மின்னஞ்சல் முகவரியும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதனூடாகப் பொதுமக்கள் விசேட நடவடிக்கை பிரிவுக்கு தகவல் வழங்க முடியும் என்றும் தொடர்புகொள்பவர்களின் இரகசியங்கள் பாதுகாக்கப்படும் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

# ஏற்றுமதி தொடர்பான வர்த்தமானி நிறுத்தம்

## விவசாய அமைச்சர் தெரிவிப்பு

மிளகு உட்பட பல வகையான வாசனைப் பொருள்களை மீள் ஏற்றுமதிக்காக இறக்குமதி செய்வதற்கு அண்மையில் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை இடைநிறுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது என்று விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையில் விளையும் மிளகு, சாதிக்காய், மஞ்சள், இஞ்சி, ஏலக்காய் போன்ற சில வாசனைப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கான வர்த்தமானி அறிவித்தல் அண்மையில் வெளியானமை குறிப்பிடத்தக்கது. (எ-இ)

# 'வற்' வரியின் அதிகரிப்பால் மூடப்படும் புத்தகசாலைகள்

கொழும்பு, மார்ச் 13

'வற்' வரி அதிகரிப்புக் காரணமாக 30 வீதமான புத்தகசாலைகள் மூடப்பட்டுள்ளன என்று இலங்கை நூல் வெளியீட்டாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

நூல்வெளியீட்டாளர்கள்மூன்று, நான்கு விதமான 'வற்' வரியை செலுத்த வேண்டியுள்ளது என்றும், குறிப்பாக மூலப்பொருள்கள் இறக்குமதிசெய்யும்போது மூன்று, நான்கு தடவைகள் 'வற்' வரியை செலுத்த வேண்டியுள்ளது என்றும் அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

1950ஆம் ஆண்டு யுனெஸ்கோவுடன் செய்து கொண்ட புளோரன்ஸ் (கல்வி சம்பந்தமான நூல்களை இறக்குமதி செய்யும் போது எந்தவித வரிகளையும் அறவிடுவதில்லை என்ற) உடன்படிக்கையை இலங்கை அரசாங்கம் மீறியுள்ளது என்றும் நூல் வெளியீட்டாளர் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது. (எ-6)

# புதினம் தெரியுமோ?

**கொ**லை செய்தவனை விடவும் கொலைக்கு உடந்தையா இருக்கிறவனுக்குத்தான் அந்தக் கொலையால வாற பாவம் கூடவா இருக்கும். முந்தநாள் இரவு வட்டுக்கோட்டையில நடந்த வாள் வெட்டுக் கொலைக்கு உடந்தையா நேவிக்காரர் இருந்திக்கினம். நாட்டின்ர ஒவ்வொரு குடிமகனையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு தங்கட எண்டு மூச்சுக்கு முந்நூறு தரம் சொல்லுற முப்படையில இருக்கிறவை அதுக்கேத்தபடி நடக்கிறதேயில்லை.

முந்தநாள் வெட்டுப்பட்ட பெடியனும், மனுசியும் காரைநகருக்குப் போட்டு வரேக்கதான், ஆளைத் தூக்கிறதெண்டு 'ஸ்கெட்ச்' போட்டிருந்தது. ரண்டு காரில வந்து பொன்னாலைச் சந்திக்குக் கிட்டவா, அந்தப் பெடியனையும், மனுசியையும் மறிக்க அவை ரண்டு பேரும் மோட்டர் சைக்கிளைப் போட்டிட்டு, நேவியிட்ட ஓடியிருக்கினம். நேவியின்ர சென்றிக்குள்ள புகுந்து 'எங்களை வெட்ட வாறாங்கள், காப்பாத்துங்கோ' எண்டு புருசனும் பெஞ்சாதியும் கெஞ்சக் கெஞ்ச அதைப் பற்றி மைண்ட்பண்ணாத நேவிக்காரர், ரண்டு பேரையும் சென்றிக்குள்ள நிக்கவேண்டாம் எண்டு துரத்தி இருக்கினம். இப்பிடி நேவியே அவையைக் கலைச்சதால, அதுக்குப் பிறகு ஒரு பயமுமில்லாமல் மனுசியை ஒரு காரிலையும், பெடியனை இன்னொரு காரிலையும் அந்தக் கொலைகாரக் கும்பல் ஏத்திக்கொண்டு போயிருக்குது.

தங்களிட்ட உயிரைக் காப்பாத்தச் சொல்லி அடைக்கலம் கேட்டவையை, சென்றிக்குள்ள வைச்சிருக்க அனுமதி இல்லாட்டி என்ன செய்திருக்கோணும்? வட்டுக்கோட்டைப் பொலிஸூக்கு பிரச்சினையைச் சொல்லி, பொலிஸ்காரரை அங்க வரவைச்சு, அவையிட்ட அடைக்கலம் கேட்ட ரண்டுபேரையும் ஒப்படைச்சிருந்தால் இப்பிடி ஒரு உயிர் அநியாயமா, கொடூரமா பறிபோயிருக்காது. அவ்வளவு ஏன், வாளால வெட்ட வந்தவையை துவக்கை காட்டி வெருட்டியிருந்தாலே' வாளும் வேண்டாம், காரும் வேண்டாம்' எண்டு தலை தெறிக்க ஓடியிருப்பினம். அதுக்குப் பிறகு நேவியிருக்கிற இடத்தில இப்பிடியான வேலையள் எண்டாலே எட்டியும் பார்த்திருக்காயினம். இப்ப என்னெண்டால், சும்மா இடத்தில வெட்டுறதை விடவும் நேவியிருக்கிற இடத்தில ஆரையும் வெட்டினால் பாதுகாப்பா வெட்டலாம், தப்பலாம் எண்ட எண்ணமெல்லோ எல்லாருக்கும் வரப்போகுது.

சரி, நேவிக்காரர் தாங்கள் தான் அடைக்கலம் குடுக்காமல், அவையைக் கலைச்சு விட்டாலும், கொஞ்ச நேரத்தில கண்ணுக்கு முன்னால இப்பிடி புருசனையும், பெஞ்சாதியையும் கதறக் கதற காருக்க கடத்திக் கொண்டு போகேக்ககூட, அதை உடன பொலிஸூக்குச் சொல்லுவம் எண்டு நினைக்கேலையே. ஏதோ கொலைகாரரோட சேர்ந்து நேவிக்காரரும் கொலைசெய்யிறதுக்கு உதவி செய்தமாதிரித்தான் படுகுது. இப்பிடி ஒரு சம்பவத்தை றோட்டில போற பொதுமக்கள் கண்டிருந்தால் கூட ஏதும் செய்து அதைத் தடுக்கப் பாத்திருப்பினம். ஆனால் கையில ஆயுதமும் வைச்சுக் கொண்டு, யூனிபோர்மும் போட்டுக் கொண்டு சந்தியில நிண்டு கசூரினா பீச்சுக்கு போய் வாறவையிட்ட தண்ணி, சிகரெட் வாங்கத் தெரிஞ் சவைக்கு, அடைக்கலம் கேட்ட உயிரைக் காப்பாத்த மனமில்லாமல் போட்டுது. கண்ணுக்கு முன்னால நடந்த இப்பிடியான கடத்தல், கொலையளையே வேடிக்கை பாக்கிற நேவிக்காரர் அதில என்ன சீலம்பாய்க்கு சென்றி போட்டு, ஆரைப் பிடிக்கப் போயினம்?

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக

# 38 ஆவது பட்டமளிப்பு விழாவில் 2,873 பேருக்குப் பட்டங்கள்

**யாழ்ப்பாணம், மார்ச் 13**

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 38ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் முதலாவது பகுதி இம் மாதம் 14ஆம், 15ஆம், 16ஆம் திகதிகளில் பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் 9 அமர்வுகளாக நடைபெறவுள்ளது. பட்டமளிப்பு விழாவில் 2 ஆயிரத்து 873 பேருக்குப் பட்டங்கள் வழங்கப்படவுள்ளன.**

பட்டமளிப்பு விழாவுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேந்தர், வாழ்நாள் பேராசிரியர் சி.பத்மநாதன் தலைமை தாங்கி, பட்டதாரிகளுக்கான பட்டங்களையும், தகைமைச் சான்றிதழ்களையும், தங்கப்பதக்கங்களையும், புலமைப்பரிசில்களையும் வழங்கவுள்ளார்.

உயர்பட்டப் படிப்புகள் பீடம், இணைந்த சுகாதார விஞ்ஞான பீடம், கலைப்பீடம், பொறியியற் பீடம், விஞ்ஞானபீடம், விவசாய பீடம், முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகபீடம், மருத்துவபீடம், தொழில்நுட்பப்பீடம், இந்துக்கற்கைள்பீடம், சித்த மருத்துவ அலகு மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னைய வவுனியா வளாகத்தைச் சேர்ந்த வியாபாரக் கற்கைகள்பீடம், பிரயோக விஞ்ஞான பீடம் மற்றும் தொழில்நுட்பக் கற்கைகள்பீடம் ஆகியவற்றைச் சேர்ந்த பட்டதாரிகளுக்கும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தால் வழங்கப்படும் வெளிவாரிப் பட்டங்களைப் பெறும் பட்டதாரிகளுக்கும் பட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

441 பட்டப்பின் தகைமை பெற்றவர்களுக்கும், 2 ஆயிரத்து எட்டு உள்வாரி மாணவர்களுக்கும், 330 வெளிவாரி மாணவர்களுக்கும் பட்டங்கள் வழங்கப்படவுள்ளன. 94 உயர்தகைமை மற்றும் தகைமைச் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. சகல பட்டக் கற்கைநெறிகளுக்குமாக 46 தங்கப்பதக்கங்களும், 9 புலமைப் பரிசில்களும், 48 பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

ஒவ்வோர் ஆண்டும் பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் பேராசிரியர் அழகையா துரைராசா தங்கப்பதக்கத்தை பீடமட்டத்தில் கலைப்பீடத்தைச் சேர்ந்த ஒருவரும், தூய மற்றும் பிரயோக விஞ்ஞானத்தில் சிறந்த செயலாற்றுகைக்கான (Best Performance) பேராசிரியர் கந்தையா குணரட்ணம் தங்கப்பதக்கத்தைப் பல்கலைக்கழக மட்டத்தில் இருந்து விஞ்ஞானபீடத்தைச் சேர்ந்த ஒருவரும் பெறவுள்ளனர்.

பட்டமளிப்பில் ஒரு பாகமாக அமையும் நினைவுப் பேருரைகளான சேர் பொன். இராமநாதன் நினைவுப்பேருரை எதிர்வரும் 20ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கும், சீமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரை பி.ப 3.45 மணிக்கும் கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளன. (எ)

## யானைகளுக்கு தனியான மருத்துவமனை

அநுராதபுரம், மார்ச் 13

ஹபரணையில் யானைகளுக்கான தனியார் மருத்துவமனை மற்றும் இனப்பெருக்க நிலையம் என்பன கடந்த வியாழக்கிழமை திறந்துவைக்கப்பட்டுள்ளன.

அங்கு ரொஷான் என்பவரே யானைகளை வைத்துப் பராமரித்து வருகிறார். அண்மையில் நடைபெற்ற பெரஹெராவின்போது, இவரது சீதா என்ற பெண் யானை மீது ஊர்காவற்படை சிப்பாய் ஒருவர் துப்பாக்கிச்சூடு நடத்தியிருந்த நிலையில் பேராதனைப் பல்கலைக்கழக மிருக மருத்துவ சத்திரசிகிச்சைப்பிரிவினர் சீதாவுக்குச் சிகிச்சையளித்திருந்தனர். தற்போது திருவிழாக்களிலும், கலாசார நிகழ்வுகளிலும் பங்குபற்றுவதற்கு, யானைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக ரொஷான் தெரிவித்துள்ளார். (ப-6)

## இந்திய மேல்சபையில் ரிஷி சுனக்கின் மாமி!

புதுடில்லி, மார்ச் 13

பிரிட்டன் பிரதமர் ரிஷி சுனக்கின் மாமி சுதா மூர்த்தி இந்திய நாடாளுமன்ற மேல்சபை உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.

73 வயதான சுதா மூர்த்தியின் மகள் அக்ஷதாவை பிரிட்டன் பிரதமர் ரிஷி சுனக் 2009ஆம் ஆண்டு திருமணம் செய்திருந்தார்.

இந்திய மேல்சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களாகவே இருப்பர். அவர்களில் 12 உறுப்பினர்கள் ஜனாதிபதியால் நியமிக்கப்படுவார்கள். அவர்களின் பதவிக் காலம் 6 ஆண்டுகளாகும். சுதாமூர்த்திக்கு தற்போது மேல்சபை உறுப்பினர் பதவி வழங்கப்பட்டுள்ளது. இந்த நியமனத்துக்கு இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி வரவேற்புத் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, சுதாமூர்த்திக்கு கடந்த ஆண்டு சமூக சேவைக்கான பத்மபூஷண் விருதும் வழங்கப்பட்டிருந்தது. (எ-6)

## அரசுடன் இணைவு; தகவல் பொய்யானது

ஐ.ம.சக்தி மறுப்பு

ரணில் ஜனாதிபதி, சஜித் பிரதமர் என்ற முன்மொழிவுடன் எதிர்காலத்தில் தேசிய அரசு அமைக்கப்படவுள்ளது என வெளியாகும் தகவலில் எவ்வித உண்மையும் இல்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின்பண்டார தெரிவித்துள்ளார்.

நாமல் ராஜபக்ச தலைமையிலான குழுவொன்று எதிரணிக்குச் செல்லவுள்ளது எனவும், ஐக்கிய மக்கள் சக்தியும், ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து தேசிய அரசு அமைக்கவுள்ளன எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. இதுதொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

"எமது தரப்பில் அவ்வாறு எந்தவொரு யோசனையும் முன்வைக்கப்படவில்லை. தெளிவானதொரு பொருளாதாரக் கொள்கைத் திட்டம் உள்ளது. அந்தக் கொள்கைக்கு இணங்கி செயற்படுவோம்" -என்றார். (ச-44)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். துணிச்சலாக முடிவெடுப்பீர்கள். எதிர்ப்புகளும் விமர்சனங்களும் நீங்கும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. இலாபம் கூடுதலாக இருக்கும். நன்மைகள் அதிகரிக்கும்.

**இடபம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். அனுகூலம் உண்டாகும். ஆபரணங்களின் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும்.

**மிதுனம்:** பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. உறவினர்கள் மூலம் ஆதாயம் கிடைக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். விற்பனையும் இலாபமும் வழக்கம்போலவே காணப்படும்.

**கடகம்:** எதிலும் பொறுமையுடனும் சிந்தித்தும் செயற்படவேண்டிய நாள். பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். விநாயகரை வழிபட அனுகூலப்பலன்கள் ஏற்படும். உடல்நலனில் கவனம் தேவை.

**சிம்மம்:** புதிய முயற்சிகளில் ஒருமுறைக்குப் பலமுறை சிந்தித்து ஈடுபடவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. உறவினர்களால் குடும்பத்தில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். தேவையற்ற செலவுகள் ஏற்படும்.

**கன்னி:** தேவையான பணம் இருப்பதால் செலவுகளைச் சமாளித்துவிடுவீர்கள். உறவினர்கள் ஆலோசனை கேட்டு வருவார்கள். மனக்கசப்புகள் நீங்கும். சுபச்செலவு ஏற்படும்.

**துலாம்:** பலவகைகளிலும் அனுகூலமான நாளாக இருக்கும். எதிர்பார்த்த பணஉதவி கிடைக்கும். குடும்ப உறுப்பினர்களிடையே உங்கள் மீதான மரியாதை அதிகரிக்கும். நற்பலன்கள் அதிகரிக்கும். பேசும்போது பொறுமை அவசியம்.

**விருச்சிகம்:** மனதுக்கு மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் நிகழும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. காரியம் இழுபறியாகும். அந்நியோன்யம் அதிகரிக்கும். மன உறுதியுடன் செயற்படுவீர்கள்.

**தனுசு:** எதிர்பார்த்த பணவரவு இருந்தாலும், எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். பிள்ளைகளால் சில சங்கடங்கள் ஏற்படும். மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்புள்ளது. பேசும்போது பொறுமை அவசியம்.

**மகரம்:** மகிழ்ச்சியான நாள். குடும்பப் பொறுப்புகளில் உற்சாகமாக ஈடுபடுவீர்கள். உங்கள் முயற்சிக்கு வாழ்க்கைத்துணையின் ஆதரவு கிடைக்கும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும்.


**கும்பம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். சிலருக்கு திடீர் செலவுகளால் கையிருப்பு குறையும். முக்கியமான முடிவு எதுவும் எடுக்க வேண்டாம். வார்த்தைகளில் நிதானம் தேவை.

**மீனம்:** புதிய முயற்சிகளை பிற்பகலுக்குமேல் தொடங்கவும். முக்கியமான முடிவு எடுப்பதில் ஆலோசனை அவசியம். ஆதாயம் கிடைக்க வாய்ப்பு உண்டு. திடீர் செலவுகளும் ஏற்படும். சங்கடங்கள் நீங்கும்.

யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபையின் ஐக்கிய தீபம் பத்திரிகை நேற்று வெளியிடப்பட்டது. மாவட்டக் கூட்டுறவு சபையின் தலைவர் மகாதேவன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.சந்திரசேகரன், மாகாண கூட்டுறவு அமைச்சின் செயலாளர் பொ.வாகீசன் ஆகியோர் கலந்துகொண்டு பத்திரிகையை வெளியிட்டனர். (ச-17)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### மோடியின் கோரிக்கையால்

# அணுத்தாக்குதலை கைவிட்டது ரஷ்யா!

### அமெரிக்க அதிகாரிகள் பரபரப்புத் தகவல்



**வொஷிங்டன், மார்ச் 13**

**உக்ரைனுக்கு எதிராக ரஷ்யா அணுவாயுதத் தாக்குதலை முன்னெடுக்க இருந்ததாகவும், இந்தியப் பிரதமர் மோடி விடுத்த கோரிக்கையைத் தொடர்ந்து அந்தத் தாக்குதல் கடைசி நேரத்தில் தடுத்து நிறுத்தப்பட்டதாகவும் பெயர் குறிப்பிட விரும்பாத அமெரிக்க அதிகாரிகள் இருவர் வெளிப்படுத்தியுள்ளனர்.**

அமெரிக்க அதிபர் ஜோ பைடன் நிர்வாகத்தில் உள்ள மூத்த அதிகாரிகள் இருவர் தனியார் செய்தி நிறுவனமொன்றுக்கான நேர்காணலில் மேலும் தெரிவித்ததாவது:

'உக்ரைன் மீது ரஷ்யா அணு ஆயுதத் தாக்குதல் நடத்தலாம் என்ற அச்சம் எங்களுக்கு ஏற்பட்டது. அப்படி ரஷ்யா அணு ஆயுதத் தாக்குதலை நடத்தினால், கடந்த 1945ஆம் ஆண்டு ஜப்பானின் ஹிரோஷிமா மற்றும் நாகசாகியில் அணுகுண்டுகள் வீசியதற்கு பிறகு நடக்கும் முதல் பேரழிவாகிவிடும். அப்படி ரஷ்யா அணுகுண்டுத் தாக்குதல் நடத்தினால், அதை எப்படி தடுப்பது என்று அதிபர் பைடன் உட்பட உலகத் தலைவர்கள் பலர் ஆலோசனை நடத்தினர்.

அதன் பின்னர்தான் இந்த விடயத்தில் புடினிடம் நேரடியாகப் பேசி அணுகுண்டுத் தாக்குதலை தடுத்து நிறுத்த உதவிசெய்ய வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடியிடம் அதிபர் பைடன் நிர்வாகம் கூறியது. பிரதமர் மோடியும் அதிபர் புடினிடம் இதுதொடர்பாக பேசியுள்ளார். மோடியின் உதவியால் உக்ரைன் மீதான அணுகுண்டுத் தாக்குதல் தடுத்து நிறுத்தப்பட்டது என்றனர். (ம)



## ட்ரம்ப் பதவிக்கு வந்தால் உக்ரைன் போர் முடியும்

*ஹங்கேரி ஜனாதிபதி தெரிவிப்பு*

நியூயோர்க், மார்ச் 13

ட்ரம்ப் மீண்டும் தெரிவானால் ரஷ்யா- உக்ரைன் போர் முடியும் என்று ஹங்கேரியின் ஜனாதிபதி விக்டர் ஓபன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் ஜனாதிபதியாகப் பதவிக்கு வந்தால் 24 மணி நேரத்தில் ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையிலான போர் முடிவுக்குவரும். அமெரிக்கா, உக்ரைனுக்கு வழங்கும் நிதி மற்றும் ஆயுதங்களை டொனால்ட் ட்ரம்ப் நிறுத்துவார் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## ‘ட்ரோன்’ தாக்குதல்களால் பற்றி எரியும் களஞ்சியங்கள்

மொஸ்கோ, மார்ச் 13

ரஷ்யாவின் இரு நகரங்களிலுள்ள எண்ணெய்க் களஞ்சியங்கள் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட ட்ரோன் தாக்குதல்களால் தீப்பற்றியுள்ளன என்று ரஷ்ய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கேஸ்டோவோ மற்றும் ஒரியோல் நகரங்களிலுள்ள எண்ணெய்க் களஞ்சியங்கள்மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளன. இவ்விரு நகரங்களும் நூற்றுக்கணக்கான கிலோமீற்றர் இடைவெளியில் உள்ளன. கேஸ்டோவோ நகரம் மொஸ்கோவுக்கு கிழக்கே 450 கிலோமீற்றர் தூரத்தில் உள்ளது.

ரஷ்யாவின் பல நகரங்கள் மீது உக்ரேன் தாக்குதல்களை நடத்திய நிலையில், இரு நகரங்களில் எண்ணெய்க் களஞ்சியங்கள் தீப்பற்றியுள்ளன.

தீயை அணைப்பதற்கான நடவடிக்கைகளில் விசேட படையினர் ஈடுபட்டுள்ளனர் என ரஷ்ய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (எ-இ)

## பனிச்சறுக்கலில் மாயமானவர்கள் சடலமாக மீட்பு

லண்டன், மார்ச் 13

சுவிட்ஸர்லாந்தில் பனிச்சறுக்கலின்போது கடந்த சனிக்கிழமை காணாமற்போன ஆறு பேரில் ஐந்து பேர் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

காணாமல்போயுள்ள மற்றுமொரு பனிச்சறுக்கு வீரரை தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது என்று சுவிட்ஸர்லாந்து பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-இ)



## இந்தியாவின் “அக்னி-5” முதல் சோதனை வெற்றி

புதுடில்லி, மார்ச் 13

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட 'அக்னி-5' ஏவுகணைகளின் முதல் சோதனை வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளது.

ஒரே ஏவுகணையில் பல்வேறு வெடிபொருள்களுடன் ஒரே நேரத்தில் பல இலக்குகளைத் தாக்கும் எம்.ஐ.ஆர்.வி. தொழில்நுட்பத்துடன் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட 'அக்னி-5' ஏவுகணையின் முதல் சோதனை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மேற்கொள்ளப்பட்டது. இது வெற்றி அடைந்துள்ளது என்று இந்திய பிரதமர் மோடி தனது ருவிற்றரில் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

அவர் தனது பதிவில், “மிஷன் திவ்யாஸ்திரா திட்டத்தின் கீழ் எம்.ஐ.ஆர்.வி. தொழில்நுட்பத்துடன் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட 'அக்னி-5' ஏவுகணையின் முதல் சோதனையை வெற்றிகரமாக நடத்திய பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத்துறை விஞ்ஞானிகளால் பெருமை கொள்கிறேன்” என்று தெரிவித்துள்ளார்.

'அக்னி- 1' முதல் 4 வரையிலான ஏவுகணைகள் 700 கிலோமீற்றர் முதல் 3 ஆயிரத்து 500 கிலோமீற்றர் தூரம் வரை சென்று தாக்கும் திறன் கொண்டவை. 'அக்னி-5' சுமார் 5 ஆயிரம் கிலோமீற்றர் தூரம் வரை செல்லக் கூடியது. இதன்மூலம் சீனாவின் வடக்கு பகுதி உட்பட முழு ஆசியாவையும் தாக்கும் எல்லைக்குள் கொண்டு வரமுடியும். (எ-இ)

## விமானிகள் குட்டித்தூக்கம்; விசாரணைகள் ஆரம்பம்!

லண்டன், மார்ச் 13

பறந்துகொண்டிருந்த பயணிகள் விமானத்தின் விமானி அறையில் இரு விமானிகளும் உறங்கிக் கொண்டிருந்த சம்பவம் தொடர்பில் இந்தோனேஷிய அரசாங்கம் விசாரணையை ஆரம்பித்துள்ளது. சுலேவெசி நகரிலிருந்து ஜகர்த்தா நகரை நோக்கி 153 பேருடன் பறந்துகொண்டிருந்த விமானமொன்றில் இரு விமானிகளும் 28 நிமிடங்கள் உறங்கினர் என இந்தோனேஷிய போக்குவரத்து பாதுகாப்புக் குழு தெரிவித்துள்ளது. விமானம் புறப்பட்ட சிறிதுநேரத்தில் துணை விமானியிடம் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு, தான் உறங்கப்போவதாக தலைமை விமானி கூறியிருக்கிறார். எனினும், துணை விமானியும் சிறிதுநேரத்தில் உறங்க ஆரம்பித்தார்.

உறக்கத்திலிருந்து விழித்த விமானி, துணை விமானியும் உறங்கிவிட்டதையும் விமானம் சிறிதுதூரம் பாதைமாறி சென்றிருப்பதையும் உணர்ந்தார். விமானியை ஜகார்த்தா வான் கட்டுப்பாட்டாளர்கள் தொடர்புகொள்ள முயன்றபோதிலும், 28 நிமிட மௌனத்தின் பின்னரே தொடர்பு கிடைத்தது. பின்னர் அவர் கட்டுப்பாட்டாளர்களுடன் தொடர்பு கொண்டு, விமானத்தை தரையிறக்கினார் என செய்தி வெளியாகியுள்ளது. விமானம் புறப்படுவதற்குமுன்னர் விமானியிடமும் துணை விமானியிடமும் நடத்தப்பட்ட இரத்த அழுத்த சோதனைகள், இதயத்துடிப்பு வேகம் ஆகியன சாதாரண அளவிலேயே இருந்தன என விமானப் போக்குவரத்து நிபுணர் அல்வின் லீ கூறியுள்ளார். (எ-இ)

## அனைவரும் சகோதரர்களே!

*கமல்ஹாசன் இவ்வாறு விளக்கம்!*

சென்னை, மார்ச்.13

எந்தக் கட்சியாக இருந்தாலும் அவர்கள் அனைவரும் என் சகோதரர்களே என்று தி.மு.க. உடனான கூட்டணி தொடர்பில் மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல்ஹாசன் விளக்கமளித்துள்ளார்.

ஏழு ஆண்டுகளுக்கு முன்னர், மக்கள் நீதி மய்யம் என்ற கட்சியை ஆரம்பிக்கும் போது, தனது அரசியல் பயணத்தில் தி.மு.க., அ.தி.மு.க. எந்தவொரு தரப்பினருடனும் கூட்டணி இல்லை என்பதை கமல்ஹாசன் அழுத்தமாக வலியுறுத்தியிருந்தார்.

எந்தக் கட்சியில் இருந்தாலும் அனைவருமே சகோதரர்கள் தான் என்று கமல்ஹாசன் அவர் தெரிவித்துள்ளார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருபூசையும் சொற்பொழிவும்

பன்னாலை, மார்ச் 13

சைவ வாழ்வியலில் பெரியபுராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துமுகமாக சிவஸ்ரீ. பால.திருகுணானந்தக் குருக்கள் நடத்தும் வாராந்தப் பெரியபுராணச் சிறப்புச் சொற்பொழிவும், நாயன் மார் குருபூசை நிறைவு விழாவும் பன்னாலை திருவருள் மிகு சிவபூதவராயர் ஆலயப் பிரதான மண்டபத்தில் சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் தலைமையில் எதிர்வரும் 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளன.

சேக்கிழார் பெருமானின் குரு பூசையைத் தொடர்ந்து, 'சேக்கிழார் புலப்படுத்தும்வாழ்வியல் நெறிகள்' என்னும் விடயப்பொருளில் சைவப்புலவர் பொன். சந்திரவேலின் சொற்பொழிவு இடம்பெற்று, சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

நிகழ்வில் ஆன்மீக விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பா. தனபாலன் கலந்துகொள்ளவுள்ளார். (ப)



## மேய்ச்சல் தரவையை மீட்டுத்தரக் கோரிக்கை

### இரத்தினபுரம் குடியேற்றத்திட்ட பண்ணையாளர்கள் மனு

**கிளிநொச்சி, மார்ச் 13**

**திருவையாறுமேற்கு, இரத்தினபுரம்குடியேற்றத்திட்டத்தில் வசிக்கும் பண்ணையாளர்கள் கால்நடைகளுக்குரிய மேய்ச்சல் தரையை மீட்டுத்தரக்கோரி கிளிநொச்சி மேலதிக மாவட்டச் செயலர் எஸ்.முரளிதரனிடம் நேற்றுமுன்தினம் மனு ஒன்றைக் கையளித்துள்ளனர்.**

கால்நடைகள் சுதந்திரமாக மேய்ச்சலில் ஈடுபடுவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று பண்ணையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மனுவைப் பெற்றுக்கொண்ட மேலதிக மாவட்டச் செயலர் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுடன் கலந்துரையாடி இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார். (எ-113)

## உடைமையில் ஹெரோய்ன் இளைஞர் கைது

ஹெரோய்ன் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் பருத்தித்துறை, கொட்டடியில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையிலேயே 23 வயதான சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் ஆவரங்கால் மேற்கு, புத்தூரைச் சேர்ந்தவர் என்றும், சந்தேகநபரிடம் இருந்து 40 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-100)

## செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு

வரணி, குடமியன் அ.த.க. பாடசாலையின் வருடாந்த செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நாளை மறுநாள் வெள்ளிக்கிழமை பி.ப. 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்விவலய கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் மு.ஜெகதாசன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய செயற்பட்டு மகிழ்வோம் இணைப்பாளர் திருமதி இ.மயில்வாகனசிங்கம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ப-159)

## வழிதவறும் இளையோரை மீட்டெடுப்பது அவசியம்

### மருத்துவ நிபுணர் அரவிந்தன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 13

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் தற்போது நூற்றுக்கும் மேற்பட்ட சிறுவர்கள் நீரிழிவு நோய்க்குச் சிகிச்சை பெறுகின்றனர். இளைய தலைமுறை ஆரோக்கியமாக வாழ்வதற்குரிய வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் நீரிழிவு அகஞ்சுரப்பியல் மருத்துவ நிபுணர் சிவமகாலிங்கம் அரவிந்தன் தெரிவித்தார்.

மறைந்த சைவத்தமிழ்ச் சொற்பொழிவாளரும், பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் முன்னாள் விரிவுரையாளருமான சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கத்தின் ஐந்தாம் வருட நினைவு நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை குப்பிழான் சிவபூமி ஞான ஆச்சிரமத்தில் நடைபெற்றது. அந்த நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போதைய காலகட்டத்தில் சிறுவர்கள், இளைஞர்கள், யுவதிகள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர். ஆரோக்கிய வாழ்வு என்பது தனியே உடல் ஆரோக்கியம் மாத்திரமன்று. உடல், உள, சமூக, ஆன்மீக ஆரோக்கியம் அனைத்தும் ஒன்றாக இணையும் போதுதான் நாங்கள் ஆரோக்கியமான வாழ்வு வாழ முடியும். எங்கள் இளைய தலைமுறை ஆரோக்கியமான வாழ்வு வாழ்வதற்கு நாங்கள் உதவி புரிய வேண்டும்.

வழிதவறிச் செல்லும் இளைஞர், யுவதிகளை மீட்டெடுக்கும் கடப்பாடு சமூகத்துக்கு இருக்கிறது. இந்தக் கடப்பாட்டை உணர்ந்து சமூகத்தின் அனைத்துத் தரப்பினரும் செயற்பட வேண்டும் என்றார். (எ-66)

## சிலப்பதிகார விழா

யாழ்ப்பாணம், மார்ச் 13

யாழ். தமிழ்ச் சங்கமும், இந்திய - இலங்கை நட்புறவுக் கழகமும் இணைந்து நடத்தும் சிலப்பதிகார விழா நல்லை ஆதீன மண்டபத்திலும், நல்லூர் துர்க்கா மணி மண்டபத்திலும் இரு அமர்வுகளாக நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 16 ஆம் திகதி காலை 9 மணிக்கு நல்லை ஆதீன மண்டபத்திலும், மாலை 4 மணிக்கு நல்லூர் துர்க்கா மணி மண்டபத்திலும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக தகைசால் வாழ்நாள் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் விழா நடைபெறவுள்ளது.

சேர் பொன். இராமநாதன் அரங்காற்றுகை மற்றும் கட்புலக்கலைகள் பீட நடனத்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி அருட்செல்வன் கிருபைராஜா வரவேற்புரையையும், முதன்மை விருந்தினரான தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழக நடனத்துறை முனைவர் செ.கற்பகம் வாழ்த்துரையையும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நடனத்துறையின் மேனாள் தலைவரும் உடுவில் நாட்டிய கலாசேத்திராவின் ஸ்தாபக இயக்குநருமான முனைவர் கிருஷாந்தி இரவீந்திரராஜா தலைமையுரையையும் ஆற்றவுள்ளனர்.

யாழ். கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் வேல். நந்தகுமார் 'சிலப்பதிகாரத்தில் ஊரும் நாடும்' , நல்லூர் பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் திருமதி தர்மினி றஜீபன் 'சிலப்பதிகாரம் காட்டும் சமூக இயைபாக்கம்', யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் திருமதி செல்வ அம்பிகை நந்தகுமரன் 'சிலப்பதிகாரத்தில் பெண் மொழிப் பயன்பாடு', யாழ். கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.பாலசண்முகன் 'சிலப்பதிகாரத்தில் விழாக்களும் சடங்குகளும்' ஆகிய தலைப்புகளில் உரையாற்றவுள்ளனர்.

பொன்னாலை சந்திரபாத கலாலய உருவாக்கத்தில் நாட்டிய கலைமணி திருமதி ஸ்ரீதேவி கண்ணதாசனின் நெறியாள்கையில் சிலப்பதிகார நாட்டிய நாடகமும் இடம்பெறும். (எ-159)

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், மார்ச் 13

வரணி, சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலயத்தின் சப்ததள இராஜகோபுர கும்பாபிஷேகம் எதிர்வரும் 20 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.31 தொடக்கம் 11.30 மணிவரை நடைபெறவுள்ளது.

அடியார்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஆலய பரிபாலன சபையினர் கேட்டுள்ளனர். (ப-159)

## சைக்கிள் திருட்டு; ஒருவர் கைது

முல்லைத்தீவு , மார்ச் 13

புதுக்குடியிருப்புப் பகுதியில் பாடசாலை மாணவர் ஒருவரின் சைக்கிளைத் திருடி வீட்டில் மறைத்து வைத்திருந்த குற்றச்சாட்டில் புதுக்குடியிருப்புப் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மக்கள் பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில், கைவேலி பகுதியைச் சேர்ந்த ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் கடந்த ஆண்டு 14 சைக்கிள்களைத் திருடியமைக்காக பொலிஸாரால் கைது செய்யப்பட்டவர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ப-13)

## சட்டவிரோத மீன்பிடி: இருவர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 13

வடமராட்சி கிழக்கு, மணற்காடு கடற்பரப்பில் சட்டவிரோத தொழில் நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இருவர் பருத்தித்துறைக் கடற்படையினரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடற்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பிலேயே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். சட்டவிரோத மீன்பிடி முறையான ஒளிபாய்ச்சி மீன்பிடித்த குற்றச்சாட்டில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் குடத்தனையைச் சேர்ந்தவர்கள் என்றும், மேலதிக நடவடிக்கைக்காக சான்றுப்பொருள்களுடன் சந்தேகநபர்கள் யாழ்ப்பாணம் கடற்றொழில் நீரியல்வளத்திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்றும் கடற்படையினர் தெரிவித்தனர். (எ-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


# ரணில் எனும் டெங் ஷியாபிங்!

சிற்பி என்று அறியப்படும் லீகுவான் யூ, சீனாவை 'உலகின் தொழிற்சாலையாக' மாற்றிய, பொருளாதாரப் புரட்சியாளர் டெங் ஷியாபிங் ஆகியோருக்குள்ள மன வலிமை இலங்கை ஜனாதிபதி ரணிலுக்கு உள்ளது - என்று புகழாரம் சூட்டியிருக்கின்றார் பெரமுனவின் முக்கியஸ்தர்களில் ஒருவரான எஸ்.பி.திஸாநாயக்க. பொருளாதாரப் புரட்சியை ஏற்படுத்தும்போது பொதுமக்களின் எதிர்ப்பு இருக்கும். ஐந்து இலட்சம் மாணவர்களின் போராட்டத்தைக் கட்டுப்படுத்தியே சீனத்தை டெங் ஷியாபிங் எழுச்சியுறச் செய்தார். ரணிலும் போராட்டங்களை இரும்புக் கரங்களைக்கொண்டு கட்டுப்படுத்துகின்றார் என்றும் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்திருக்கின்றார்.

ஒரு தலைவனின் ஆளுமை, அவர் மக்கள் போராட்டத்தை எவ்வளவுதூரம் கட்டுப்படுத்துகின்றார் என்பதில் வெளிப்படும் ஒன்றல்ல. போராட்டங்களைக் கட்டுப்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டு ரணிலின் பலத்தையும் - திறமையையும் மதிப்பிடும் எஸ்.பி. , முதலில் ஒரு விடயத்தைத் தெட்டத்தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டும். சிங்கப்பூரிலும், சீனாவிலும் பொருளாதார மறுமலர்ச்சிகள் ஏற்படுத்தப்படுவதற்கு முன்னர், அந்தந்த நாடுகளில் திளைத்திருந்த ஊழல் மோசடிகள் வேரோடு பிடுங்கி எறியப்பட்டன. போதைப்பொருளுக்கு எதிரான மிகப்பெரிய 'படையெடுப்பை' பாராபட்சம் இல்லாமல் மேற்கொண்டது சிங்கப்பூர். கம்யூனிசக் கொள்கைகளுக்கு அமைய ஊழல்பேர்வழிகளின் சொத்துகளை அடியோடு பறித்தெடுத்து, அவற்றை மக்கள் மயப்படுத்தியே சீனா தன் மறுமலர்ச்சிப் பயணத்தை ஆரம்பித்தது. இன்று சீனத்தில் ஓடும் பலநூறு கப்பல்கள் கறுப்புப் பணமாக முன்னொரு காலத்தில் பதுக்கப்பட்டிருந்த சொத்துகள்தான். ஆதலால், இன்னொரு டெங் ஷியாபிங் போன்றோ, மா சேதுங் போன்றோ அல்லது லீகுவான் யூ போன்றோ ரணில் தன்னைத் தரமுயர்த்திக் கொள்ளவேண்டுமாயின், முதலில் இந்தத் தீவில் ஆழமாக வேரூன்றியிருக்கும் ஊழல் பேர்வழிகளுக்கு அழுத்தம் திருத்தமான முடிவுரையை எழுதியே ஆகவேண்டும். ஊழலாலும் மோசடியாலும் கறுப்புப் பணத்தாலும் பில்லியன் கணக்கான டொலரை இலங்கை இழந்துள்ளது. அப்பாவி இலங்கையர்களின் பணம் இருக்குமிடம் தெரியாதிருக்கையில் சர்வதேச நாணய நிதியத்திடம் வாங்கிக்குவிக்கும் கடன்களால் எவ்வாறு இலங்கையின் பொருளாதாரம் மீட்சியடையும்? இது எவ்வாறு பொருளாதாரச் சீர்திருத்தமாகும்? இதை மேற்கொள்ளும் ஒருவர் எவ்வாறு பொருளாதாரச் சீர்திருத்தவாதியாவார்?

பொருளாதாரச் சீர்திருத்தங்களை மேற்கொண்டு 'உலகின் தொழிற்சாலையாக' சீனாவை டெங் ஷியாபிங் மாற்ற முற்பட்டபோது அவர் மேற்கொண்ட முதலாவது நடவடிக்கையாக கடல்சார் பொருளாதாரப் பாதுகாப்பே இருந்தது. கப்பல்காவுகைக் கட்டணங்களைத் தவிர்ப்பதற்காக புதிதுபுதிதாக கப்பல்களை உருவாக்கினார், துறைமுகங்களை ஏற்படுத்தினார், தற்சார்புப் பொருளாதாரத்தை வலுப்படுத்தினார், தொழிற்சாலைகளை உருவாக்கினார். 1978ஆம் ஆண்டில் டெங் ஷியாபிங் பொருளாதார சீர்திருத்தங்களை மேற்கொண்டபோது உலகப் பொருளாதாரத்தில் சீனாவின் பங்களிப்பு 1.8 வீதமாக இருந்தது. 2017ஆம் ஆண்டில் உலகப் பொருளாதாரத்தில் சீனாவின் பங்களிப்பு 18.2 வீதமாக உயர்ந்துவிட்டது. கடந்த 40 வருடத்தில் முப்பது மடங்கால் சீனாவில் வர்த்தகச் சுழற்சி அதிகரித்திருக்கின்றது. 1978ஆம் ஆண்டு வருடம் முழுவதும் மேற்கொண்ட பொருளாதார ஈட்டுகையை தற்போது இரண்டே நாள்களில் செய்கின்றது சீனம். உள்நாட்டு உற்பத்தியையும், போதைக்கு முற்றுப்புள்ளியையும், தற்சார்புப் பொருளாதாரத்தைப் பலப்படுத்தாமலும் எந்தவொரு நாட்டுக்கும் இது சாத்தியமேயில்லை.

உண்மையில் ரணிலும் ஒரு டெங் ஷியாபிங் என்றால் முதலில் அவர் கைவைக்க வேண்டியது ஊழலிலும் கறுப்புப் பணத்திலும்தான். அதை அவரால் செய்ய முடியுமா? அவ்வாறு செயற்படுவாராயின் ரணில் ஒரு மாபெரும் தலைவராக இலங்கையர்களின் வரலாற்றில் எழுதப்படுவார். ஆனால், அவர் ஆட்சியில் தொடர்வாரா? என்பதற்குரிய பதில், ரணிலுக்கும் தெரியும்; எஸ்.பி.க்கும் தெரியும்.




# பாடசாலை மாணவர்களை இலக்குவைத்து 'ஈ-சிகரெட்'

## கலால் ஆணையாளர் எச்சரிக்கை

**கொழும்பு, மார்ச் 13**

**இலங்கையின் கிராமப்புறங்களில் தற்போது மின் - சிகரெட்டுகள் அச்சுறுத்தலாக வேகமாகப் பரவி வருகின்றன என்று இலங்கை கலால் திணைக்களம் எச்சரித்துள்ளது.**

இதுதொடர்பில் கலால் ஆணையாளர் நாயகம் எம்.ஜி.குணசிறி தெரிவிக்கையில்;

ஜா - எல விசேட கலால் சுற்றிவளைப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சுமார் ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான ஈ-சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கொழும்பு, கம்பஹா மற்றும் பாணந்துறை போன்ற தலைநகரை மையமாகக் கொண்ட புறநகர்ப் பகுதிகளில் பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட 40 வயதுக்குட்பட்டோர் தற்போது ஈ-சிகரெட்டுகளைப் பயன்படுத்துகின்றனர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இவை ஒன்லைன் ஊடாக கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையம், கொழும்பு துறைமுகம் மற்றும் கடல் வழிகள் ஊடாக இலங்கைக்குள் பிரவேசிப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் கல்வி அதிகாரிகள், பொலிஸார் மற்றும் கலால் திணைக்கள அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுத்து அவற்றைக் கட்டுப்படுத்த வேண்டும் - என்றார். (ச-இ)

# சூரியசக்தி மின்நிலையம் மட்டக்களப்பில்

சூரியமின்சக்தி நிலையம் நேற்று மட்டக்களப்பில் திறக்கப்பட்டுள்ளது. மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச அந்த நிலையத்தைத் திறந்து வைத்தார்.

நாட்டின் மின்சார உற்பத்திக்கு பங்களிப்புச் செய்யும் வகையில் 'வெக்வே சோலார் பிரைவேட் லிமிடெட்' நிறுவனத்தின் ஊடாக இந்த நிலையம் அமைக்கப்பட்டது. (ச-இ)

# சம்பள அதிகரிப்பு; எதிர்ப்புப் போராட்டம்

மத்திய வங்கி ஊழியர்களின் சம்பள அதிகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து சமூக ஆர்வலர்கள் நேற்றுமுன்தினம் இலங்கை மத்திய வங்கிக்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

'நாட்டின் நிலை அறிந்துகொண்டு சம்பளத்தை உயர்த்த வெட்கமில்லையா?, கடற்கொள்ளையர்களைவிட இவர்கள் பெரிய கொள்ளையர்கள், ரூபா உயர்ந்தது நாடு சரிந்தது சம்பளம் உயர்த்தப்பட்டது' போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். (ச-இ)

# 'அஸ்வெசும' இரண்டாம் கட்ட கொடுப்பனவு

கொழும்பு, மார்ச் 13

'அஸ்வெசும' நலன்புரித்திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கான இரண்டாம் கட்டத்துக்கான கொடுப்பனவுகள் எதிர்வரும் ஜூன் மாதம் முதல் வழங்கப்படும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார். (ச-இ)

# இலங்கைக்கு படையெடுக்கும் சுற்றுலாவிகள்

கொழும்பு, மார்ச் 13

மார்ச் மாதத்தின் கடந்த ஆறு நாள்களில் மாத்திரம் 40 ஆயிரத்து 877 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர் என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

ரஷ்யாவில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்து வருகிறது என்றும் அந்த சபை குறிப்பிட்டுள்ளது. கடந்த மாதத்தில் மாத்திரம் 2 இலட்சத்து 18 ஆயிரத்து 350 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

**நாளை**

14.03.2024

**வியாழக்கிழமை**

**பங்குனி – 01**

சுபநேரம் : 07.51 - 09.21

ராகுகாலம் : 01.51 - 03.21

**நாளொரு நல்வார்த்தை**

உனக்கு சிரிப்பதற்கு பேசுவதற்கு நேரம் இல்லையென்றால், நீ உன் வாழ்வில் முன்னேறிக்கொண்டு இருக்கிறாய் என்று அர்த்தம்.

– அலெக்சாண்டர் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பெரிய பள்ளிவாசல் நிர்வாகத் தெரிவுக்குக் கண்டனம்

யாழ்ப்பாணம் பெரிய பள்ளிவாசல் நிர்வாகத் தெரிவில், வெளிமாவட்டத்தைச் சேர்ந்த நபர்கள் உள்ளீர்க்கப்பட்டமையைக் கண்டிப்பதாக யாழ்ப்பாணம் மாநகரசபையின் முன்னாள் உறுப்பினர் சரபுல் அனாம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணம் பெரிய பள்ளிவாசல் 1967ஆம் ஆண்டு ஒரு சிறு கொட்டகையாக ஆரம்பித்து, பல்வேறுபட்ட முயற்சிகளின் பின்னரேயே இவ்வாறு பெரிதாகக் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. ஆதலால், இந்தப் பள்ளிவாசலுக்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நபரே தலைவராக வரவேண்டும் என்பதே அநேகமான மக்களின் விருப்பமாக இருக்கின்றது. எனவே, யாழ்ப்பாணத்தவர்களைப் புறமொதுக்கி வெளிமாவட்டத்தைச் சேர்ந்தோரை உள்ளீர்த்து மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த நிர்வாகத் தெரிவை நான் கடுமையாகக் கண்டிக்கின்றேன்.

ரமழான் மாதம் முடிந்த பின்னர் மீண்டும் நிர்வாகத்தைத் தெரிவுசெய்ய வேண்டும் என்று நான் வலியுறுத்துகின்றேன். முஸ்லிம் மக்களின் இந்தக் கோரிக்கையை முஸ்லிம் கலாசாரத் திணைக்கள அதிகாரிகள் செவிமடுக்க வேண்டும் என்றும் நான் வலியுறுத்துகின்றேன் - என்றார்.

(ம-20)

## பெரமுனவின் வேட்பாளர் ரணில் அல்லர்

ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரம சிங்க அல்லர். அவர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரே.

இவ்வாறு பொதுஜன பெரமுன கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான திஸ்ஸ குட்டியாராச்சி தெரிவித்தார். மொட்டுக் கட்சித் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது அவர் இவ்வாறு கூறினார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளராகக் களமிறக்கினால் எமக்கு எந்தப் பிரச்சினை இல்லை. ஆனால் அவருக்கு ஆதரவு வழங்குவது தொடர்பில் கட்சியின் உயர்மட்டம் ஆலோசிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)


## மரண அறிவித்தல்

மலர்வு
01 . 11 . 1950



உதிர்வு
01 . 03 . 2024

### இராமநாதன் கமலேஸ்வரி (கமலா)

யாழ்ப்பாணம் மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி இல.105, கனகாம்பிகைக் குளத்தை வதிவிடமாகவும், பிரித்தானியா Ross - on - Wye ஐ வசிப்பிடமாகவும் கொண்ட இராமநாதன் கமலேஸ்வரி (கமலா அக்கா) கடந்த 01.03.2024 வெள்ளிக்கிழமை பிரித்தானியாவில் காலமானார்.

அன்னார் மீசாலை வடக்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான தியாகராஜா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், மீசாலை கிழக்கைச்சேர்ந்த காலஞ்சென்றவர்களான பொன்னையா - காசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராமநாதன் அவர்களின் அன்பு மனைவியும், இராகுலன், இராதேயன், இராதீபன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுகன்யா, லக்சிகா, ரேவதி ஆகியோரின் அன்பு மாமியாரும், அஸ்வினி, ஆருண்யா, இராகவி, சங்கவி, அகரன், ரதிலன், சிந்தனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற பரமநாதன் மற்றும் கருணாதேவி, பத்மநாதன், மகேஸ்வரன், கமலராணி, கமலாம்பிகை, கலாநிதி, கணேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், தனலக்ஸ்மி, மகேந்திரநாதன் பவளராணி, மனோகரி, காலஞ்சென்றவர்களான மகாலிங்கம், குமாரகுலம் மற்றும் தவலோஜினி, காலஞ்சென்ற பத்மநாதன் மற்றும் பூபதி, பழனிநாதன், யோகநாதன், சந்திரநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரித்தானியாவிலும், அஞ்சலி நிகழ்வானது இன்று (13.03.2024) புதன்கிழமை இல.105, கனகாம்பிகைக்குளத்தில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்திலும் காலை 9.00 மணிக்கு நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்

தொடர்புகளுக்கு:

| | | |
|---|---|---|
| இராகுலன் | (வசந்தன் - மகன்) | + 161 484 92931 |
| இராதேயன் | (வினோ - மகன்) | + 447 969 838381 |
| இராதீபன் | (தீபன் - மகன்) | + 447 478 224 223 |
| P.தேமதுரன் | (பெறாமகன் - கிளிநொச்சி) | 077 563 0618 |

(256972) (N-1)


மஸ்கெலியா

## விமான விபத்து இடம் சுற்றுலாத் தலமாகிறது




1974ஆம் ஆண்டு சவூதி அரேபியாவின் ஜெத்தாவுக்கு யாத்திரிகர்களை ஏற்றிச்சென்ற விமானமொன்று மஸ்கெலியாவில் உள்ள மலைப்பகுதியில் வீழ்ந்து விபத்துக்குள்ளான இடத்தை, சுற்றுலாத்தலமாக மேம்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

191பேர் உயிரிழந்த சப்தகன்னியர்மலையில், இறந்தவர்களின் நினைவாக நினைவுச்சின்னமொன்று அமைக்கப்பட்டுள்ள நிலையில், தற்போது அந்த மலைப்பகுதியை சுற்றுலாத்தலமாக மாற்றுவதற்கு மத்திய மாகாண ஆளுநர் லலித் கமகேயால் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)


## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
10 . 08 . 1933



ஆண்டவன் அடியில்
23 . 02 . 2023

### பொன்னுத்துரை வாலாம்பிகை

திதி: சதுர்த்தி (13.03.2024)

ஆண்டொன்று மறைந்துவிட்டது அம்மா!
அகலுமா உங்கள் பிரிவின் சோகம்
மறையுமா உங்கள் நினைவின் பாசம்
எங்களை நிர்க்கதியாய் அநாதையாய் பரிதவிக்க
விட்டுவிட்டு எங்கு சென்றீர்கள்
காலங்கள் ஆயிரம் போனாலும்
மறக்க முடியுமா உங்கள் நினைவுகளை
எங்கள் உயிர் உள்ளவரை உங்கள் நினைவுகள் தொடரும் ....
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

29/7, சேர்ச் லேன்,
[illegible]
[illegible]ணம்.

குடும்பத்தினர்

(cs.54356)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதன் பொய்கை

13.03.2024
புதன்கிழமை

**"என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம்"**

**பொருள்:** எலும்பு இல்லாத உடம்போடு வாழும் புழுவை வெயில் காய்த்து வருத்துவது போல் அன்பு இல்லாத உயிரை அறம் வருத்தும்.

## அதிகரிக்கும் வன்கொடுமைகளும், வன்புணர்வுகளும்



# நாம் அயோக்கியர்களா? அரவணைப்பாளர்களா?

■ நி.பிரதிகா



நவீன தொழில்நுட்பங்களும், விஞ்ஞானத்தின் புதிய படைப்புகளும் தலைத்தூக்கி நிற்கும் 21ஆம் நூற்றாண்டில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். இந்த விந்தை உலகிலே நாம் வியந்துபார்க்கும் விடயங்களும் எம்மை வருந்த வைக்கும் சம்பவங்களும் நடத்து கொண்டுதான் இருக்கின்றன. மனிதர்களாகிய நாம் காலத்தின் வளர்ச்சி வேகத்துக்கேற்ப அறிவிலும், பணத்திலும் எம்மை வலுப்படுத்திக் கொள்கின்றோமே தவிர மனிதாபிமானத்தில் எம்மை வலுப்படுத்த மறந்துவிடுகின்றோம். அதிகரித்துவரும் சிறுவர் மற்றும் பெண்களுக்கு எதிரான துஷ்பிரயோகங்களுக்கும் அதுவே காரணமெனக்கூறலாம்.

'இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்' என்றும் 'பெண்கள் நம் கண்கள்' என்றும் கூறுவது வெறும் வாய்வழி வார்த்தைகளாகிப்போய்விட்டன. சிறுவர்களை வேலைக்கு அமர்த்தல், சரமாரியாக அடித்தல், யாசகம் கேட்க அனுப்புதல், கல்விக்கான வாய்ப்புகளை வழங்க மறுத்தல், பாலியல் ரீதியான தொந்தரவுகளைக்கொடுத்தல் போன்ற சிறுவருக்கெதிரான வன்கொடுமைகளும், அதேபோல பெண்களை அடிமைப்படுத்தல், பாலியல் ரீதியான தொந்தரவுக்குட்படுத்தல் போன்ற பெண்களுக்கெதிரான செயற்பாடுகளும் குறைவதாய் தெரியவில்லை. இவைபற்றி நாளொன்றுக்கு ஒரு தகவலாவது எம் காதுகளின் வழிசென்று இதயத்தைக் கிழிக்கத்தான் செய்கின்றது. பத்திரிகைகளிலே சிவப்பு பக்கங்களுக்குக் குறைவில்லை. பார்க்கும் இடமெல்லாம் 'நீதி வேண்டும்' என பதாகைகளை ஏந்தியபடி பாதிக்கப்பட்டவர்கள் தவித்து நிற்கின்றனர். காமக்கொடூரர்களின் கண்களில் படாமல் பெண்களைப் பாதுகாப்பதென்றால், கூண்டுக்கிளியாகத்தான் வாழவைக்கமுடியும்.

**காலம் கடந்து கிடைக்கும் நீதி மறுக்கப்பட்ட நீதிக்கு சமனாகும். குற்றவாளிகளுக்கெதிரான நியாயமான தீர்ப்பை பாதிக்கப்பட்ட பெண்களுக்கு வழங்குவது மட்டும் முக்கியமல்ல. அதை விரைவாகவும் வழங்க வேண்டும். இது ஏனைய பெண்களுக்கும் சமூகத்தின் மீதான நம்பிக்கையையும், அவர்களை துன்புறுத்தும் காமவெறியர்களுக்குப் பயத்தையும் ஏற்படுத்தும்.**

### சின்னாபின்னமாகும் சிறுவர்கள் உலகம்

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் தற்போது சிறுவர் துஷ்பிரயோகங்களும் அதிகரித்து வருவது அச்சத்தை ஏற்படுத்தும் விடயமாகவேயுள்ளது. அன்பான குடும்பமே சிறுவர்களுக்கான பாதுகாப்பு அரண் என்று சொல்வார்கள். ஆனால் இன்று குடும்பநபர்களே தம் குழந்தைகளைக் கொடுமைப்படுத்தும் செயல்கள் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன. இது எவ்வகையில் நியாயமாகும்? அதுமட்டுமா! இரத்த உறவுகளே தங்களின் காமப்பசிக்குச் சொந்தப் பெண்பிள்ளைகளையே இரையாக்கும்செய்திகளையும் நாம் கேள்விப்பட்டுள்ளோம். 2018ஆம் ஆண்டில் மாத்திரம் இலங்கையில் 2 ஆயிரத்து 413 சிறுவர்கள் பல்வேறு கொடுமைகளுக்கும், 555 சிறுவர்கள் பாலியல் துன்புறுத்தலுக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளனர். இவ்வாறான சம்பவங்கள் தொடருமானால் நாட்டின் எதிர்காலம் நாசமாகும் என்பதே உண்மை. சர்வதேச சிறுவர் தினம் ஒக்ரோபர் முதலாம் திகதி உலகம் முழுவதும் கொண்டாடப்படுகின்றது. இதன் மூலம் சிறுவர் எதிர்நோக்கும் சவால்கள், வன்முறைகள் பற்றி ஒருநாளேனும் எண்ணிப்பார்க்கமுடியும். ஆனால் அதனால் என்ன பயன் கிடைத்துவிட்டது? உண்மையில் ஒற்றைநாள் சிந்தனைகளால் ஒன்றும் மாறிவிடாது. சிறுவர்களுக்கு வளமான எதிர் [illegible] தினம் [illegible] மெழுகுவர்த்திகளாக மாற்றிக்கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோர் தம் பிள்ளைகளின் பாதுகாப்பில் நூறு வீதம் உறுதியாயிருத்தல் வேண்டும். நல்ல தொடுகை, தீயதொடுகை பற்றிய விளக்கத்தை அவர்களுக்கு ஏற்படுத்தவேண்டும். சிறுவர்களை வேலைக்கு அமர்த்துபவர்கள், உடல் உளரீதியாகக் கொடுமைப் படுத்துபவர்கள் மற்றும் பாலியல் தொந்தரவு செய்பவர்களுக்கெதிராக கடுமையான சட்டநடவடிக்கை எடுக்கப்படவேண்டும். சிறுவர்களுக்குப் பாதுகாப்பான வீட்டுச்சூழல், பாடசாலைச்சூழலை உருவாக்கிக் கொடுப்பதன் மூலம் துஷ்பிரயோகங்களை குறைக்க முடியும். இல்லாவிடின் அநாதை ஆச்சிரமங்கள், கைவிடப்பட்ட சிறுவர் பாதுகாப்பு இல்லங்கள், சிறுவர் சீர்திருத்தப்பள்ளிகளின் தேவைகள் என்பன அதிகரித்துக்கொண்டுதான் இருக்கும்.

### என்று தணியும் பெண்ணடிமைத்தனம்

'பெண்ணடிமை தீருமட்டும் பேசும் திருநாட்டு மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே' என்கிறார் பாரதிதாசன். ஒரு நாட்டின் விடுதலைக்குப் பெண் விடுதலை அவசியம் என்பதை இதிலிருந்து உணர முடிகின்றது. அறிவியல் முன்னேற்றமடைந்த போதும் ஆண்,பெண் என்ற உறவில் பெரும் தடுமாற்றமே இருந்து வருகின்றது. பெண்கள் அனைத்தையும் போராடியே பெற வேண்டியுள்ளது. இந்த நிலையில் பாலியல் தொல்லைகளும் திணிக்கப்பட்டால் எவ்வாறு பெண்கள் மீண்டுவருவது?

மகளிரின் மகத்துவத்தை உணர்த்தும் நாளாக மார்ச் 8ஆம் திகதி சர்வதேச மகளிர் தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

அன்றொருநாளாவது என்னைப்பெற்ற தாயுமொரு பெண்தானே எனச் சிந்தித்துப்பாருங்கள். பாலியல் கொடுமைகளுக்கு எதிராகக் கடும் சட்டநடவடிக்கை எடுக்கப்படுமேயானால் பெண்களுக்கெதிரான வன்புணர்வுகளைச் சற்றேனும் குறைக்கமுடியும். காலம் கடந்து கிடைக்கும் நீதி மறுக்கப்பட்ட நீதிக்கு சமனாகும். குற்றவாளிகளுக்கெதிரான நியாயமான தீர்ப்பை பாதிக்கப்பட்ட பெண்களுக்கு வழங்குவது மட்டும் முக்கியமல்ல. அதை விரைவாகவும் வழங்கவேண்டும். இது ஏனைய பெண்களுக்கும் சமூகத்தின் மீதான நம்பிக்கையையும், அவர்களைத் துன்புறுத்தும் காமவெறியர்களுக்குப் பயத்தையும் ஏற்படுத்தும்.

மனிதர் என்ற போர்வையில் மிருகங்களாய் வாழ்வோருக்கு எதிராக, மௌனம் சாதிக்காது எங்கள் கைகளை உயர்த்திப் போராடுவோம். 'ஒருவரது நியாயமான உரிமைகளை மறுப்பது போல் அயோக்கியத்தனம் வேறு எதுவுமில்லை' என்கின்றார் இங்கர்சால். நாம் அயோக்கியர்களா? அரவணைப்பவர்களா? ■

# வடக்கின் தென்னைகளுக்கு எமனாக வெள்ளை ஈக்கள்



■ நந்தன்

வடக்கே தென்னை மற்றும் ஏனைய பயன்தரும் பயிர்களைத் தாக்கி வரும் வெள்ளை ஈக்களினால் தென்னை வளம் பாதிக்கப்படும் அபாயம் பெருமளவில் ஏற்பட்டுள்ளது. தற்போதைய காலநிலை வேறுபாடான கடுமையான வறட்சி, வெப்பம் போன்றவற்றால் வெள்ளை ஈக்கள் வேகமாகப் பரவி மரங்களைத் தாக்கி வருகின்றன.

ஆரம்பத்தில் தென்னைகளில் அவதானிக்கப்பட்ட இந்த வெள்ளை ஈக்களின் தாக்கம் தற்போது மா, பலா, வாழை போன்ற பயன்தரும் மரங்களிலும் தாராளமாகவே அவதானிக்கப்பட்டுள்ளது. தென்னை அபிவிருத்திச்சபையினரும் விவசாயத் திணைக்களங்களின் அதிகாரிகளும் ஒன்றிணைந்து செயற்பட்டு இந்தப் பேரழிவில் இருந்து பயன்தரு மரங்களைக் காப்பாற்றிக்கொடுக்க வேண்டும் என்பதே பொதுமக்கள் பலரின் கோரிக்கையாக உள்ளது.

வெள்ளை ஈக்கள் வெப்பமான காலநிலையில் விரைவாகப் பரவக்கூடியன. ஆதலால், இனிவரும் காலங்களில் இந்தத் தாக்கம் மேலும் தீவிரமாக வியாபிக்கக்கூடிய சாத்தியங்கள் இருப்பதாகவே சுட்டிக்காட்டப்படுகின்றது. தென்னை அபிவிருத்திச் சபையினர் தமக்கு முறைப்பாடு கிடைக்கும் இடங்களுக்குச் சென்று இந்த ஈக்களின் தாக்கத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றமையும் கண்கூடு.

### தேங்காய் விலை அதிகரிப்பு

தற்போது வெப்பநிலை காரணமாக தென்னை மரங்களில் தேங்காய் உற்பத்தி குறைந்துள்ளமையால் தேங்காய்களின் விலை அதிகரித்துள்ளது. வெள்ளை ஈக்களின் நோய்த்தாக்கத்தால் மரங்கள் காய்க்கும் தன்மையை இழக்கின்றன. இதனால் தேங்காய் உற்பத்தி பாதிப்படையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

வெள்ளை ஈக்களில் இருந்து கறுப்பு நிறத்திலான ஒட்டும் தன்மையுடைய திரவம் வெளிவிடப்படுவதால் சுற்றுச்சூழல் பாதிப்படைகின்றது. காற்றின் தாக்கத்தினால் இவை சூழலுக்குள் பரவி சூழல் மாசையும் ஏற்படுத்துகின்றன.

வடக்கே பல ஆயிரக்கணக்கான தென்னை மரங்கள் உள்ளன. இவற்றின் பயன்பாட்டினால் பல்லாயிரக்கணக்கான மக்கள் நன்மை யடைந்து வருகின்றனர்.

இந்த மரங்களிலிருந்து பெறப்படும் கள்ளை நம்பி சீவல் தொழிலாளர்கள் வாழ்கின்றனர். கடந்த கால போரால் பல ஆயிரக்கணக்கான தென்னைகள் அழிக்கப்பட்டன. அவற்றிக்கு ஈடாக வருடாவருடம் தென்னங் கன்றுகளை நட்டு தென்னை வளத்தை ஈடுசெய்ய பல் வேறுபட்ட முயற்சிகள் முன்னெடுக்கின்றபோதும் அந்த முயற்சிகள் முழுதான வெற்றியளித்ததாக இல்லை. இவ்வாறிருக்கையில் வெள்ளை ஈக்களின் தாக்கம் விரைவாகக் கட்டுப்படுத்தப்படவில்லையென்றால் அது பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாகவே ஆகும். ■



> “ வெள்ளை ஈக்களில் இருந்து கறுப்பு நிறத்திலான ஒட்டும் தன்மையுடைய திரவம் வெளிவிடப்படுவதால் சுற்றுச்சூழல் பாதிப்படைகின்றது. காற்றின் தாக்கத்தினால் இவை சூழலுக்குள் பரவி சூழல் மாசையும் ஏற்படுத்துகின்றது.




புதன்பொய்கைக்கு நீங்களும் எழுதலாம்



- கட்டுரைகள்
- கவிதைகள்
- விமர்சனங்கள்
- நூல் அறிமுகம்
- பதிவுகள்
- அறிவியல்
- கலைபடைப்புக்கள்

அனுப்பவேண்டிய முகவரி:
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

0773165555


## காதலின் சாபம்

சொல்லாத அன்பால் சோகம்
கூடியது என்னுள்ளே
நில்லாத ஞாபகங்கள் - நிலை
கொண்டது எனக்குள்ளே

மனமோ வாடியது அன்பை
அடைந்திட வழிதேடியது
நினைவுகள் கொள்வதினால்
நிமிடங்களும் சுமையாகியது

நிசப்த இரவில் எல்லாம்
நெஞ்சுருகி போகிறேன்
எட்டாத அன்பைக் கூட
எட்டித்தொட பார்க்கின்றேன்

என்னுள்ளே மிஞ்சுவது
எந்நாளும் சோகமே
இதுவே நான்பெற்ற
காதலின் சாபமே

[illegible]
[illegible]



## தாய்

தன்னையுருக்கி
தாய்மை பெருக்கி
என்னை
உலகில் உயரவைத்து
மண்ணை நேசிக்க
உரமூட்டியவள் தாய்
கண்ணைப்போல ஒளிதந்து
கருணை தனை நிதமூட்டி
விண்ணைப்போல பரந்து
தியான மனம் படைத்து
உண்மை அன்பால்
அரவணைப்பவள் தாய்


துள்ளித்திரியும் வயதில்
துணையாய் நின்று
பள்ளிப்பாடம்
சொல்லித்தந்து
பசிமறந்து
தூக்கம் கலைந்து
உண்ணாமல் உறங்கி
உள்ளத்தில் உறவாடும்
உத்தமி தாய்

வறுமை தெரியா வயதில்
பலதும் பத்தும் தந்து
பணம் சேர்த்து
பாடுபட்டுப் பாரில்
நாம் வளமாய் வாழ
வழிகாட்டுபவள் தாய்

க.நாகேஸ்வரா
சண்டிலிப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால்...!



சிந்திப்பதை எல்லாம் மனிதனால் செயற்படுத்த இயலாது என்பதை உணர்ந்த கண்ணதாசன், 'நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால் தெய்வம் ஏதுமில்லை' என்று எழுதிவைத்துச் சென்றார். ஆனால், மனித மூளை சிந்தித்தால் மட்டுமே போதும், அதை அந்த நபரின் முயற்சி இல்லாமலேயே செயற்பாடாக நடத்திக் காண்பிக்கமுடியும் என்பதை நிரூபிப்பதில் முதல் மைல்கல்லைத் தொழிலதிபர் எலான் மஸ்க் எட்டியுள்ளார்.

**சிந்தித்தாலே போதும்!**

யாரையேனும் திறன்பேசியில் அழைக்க வேண்டுமானால், அதை எடுத்துத் தொடுதிரையைத் தொட்டு, பெயரைத் தேடி அழைப்பதுதான் வழக்கம். சில திறன்பேசிகளில் நண்பரின் பெயரை உச்சரித்தால் அதுவே அழைத்துவிடும். ஆனால், கைகளைப் பயன்படுத்த முடியாத அல்லது பேச முடியாத பாதிப்புகளை ஏற்படுத்தும் நரம்பியல் நோய்கள் உள்ள நபர்களுக்கு இது சாத்தியமல்ல.

இப்படிப் பாதிப்புக்குள்ளான நபர்கள், நண்பர் ஒருவரைத் தொடர்புகொள்ள வேண்டுமென்று சிந்தித்தாலே போதும், அவரது திறன்பேசி அவர் நினைத்த நண்பருக்கு அழைப்பைப் பெற்றுக்கொடுக்கும்; அல்லது பேச முடியாத நபரின் சிந்தனைகளை அவரது நண்பருக்குத் திறன்பேசியின் மூலம் குறுஞ்செய்தியாக அனுப்ப முடியும். இதுதான் எலான் மஸ்க்கின் 'நியூராலிங்க்' நிறுவனத்தின் 'டெலிபதி திட்டம்'.

**எப்படிச் சாத்தியமாகும்?**

ஒரு நடவடிக்கையைச் செயற்படுத்தும் முன் நுணுக்கமாகத் திட்டமிடுவது, அதை உடல் உறுப்புகள் மூலம் செயற்படுத்துவது, பேச்சுத்திறன் போன்றவை முன் மூளையின் வெவ்வேறு பகுதிகளின் செயற்பாடுகளாகும். உடல் உறுப்புகளைப் பயன்படுத்தி வெளியுலகைத் தொடர்புகொள்ள இயலாத நபரின், நடவடிக்கைகளைத் திட்டமிடும் மூளைப் பகுதியில் 'நியூராலிங்க் சில்லு' ஒன்றை ரோபாட்டிக் நுண்துளை சத்திரசிகிச்சை மூலமாகப் பொருத்துவது நியூராலிங்க் திட்டத்தின் முதல் கட்டம்.

பின்பு, பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்ட இந்தச் சில்லின் நுண் இழைகள் மூலமாகச் சேகரித்து அனுப்பப்படும் அலைக்கற்றைகளை இதற்கென்று தயாரிக்கப்பட்ட திறன்பேசி அல்லது கணினிச் செயலிகள் குறிவிளக்கம் செய்து திறன்பேசி அல்லது கணினியை வேலை செய்ய வைக்கிறது. இதன் மூலம் செயற்கை உறுப்புகளைக்கூட சிந்திப்பதன் மூலம் அந்நபரை செயற்படுத்த வைக்கலாம்.

மூளையின் சிந்தனைக்கும் திறன்பேசி அல்லது கணினிகளின் செயற்பாட்டுக்கும் இடையிலான இடைவெளியை நிரப்பும் இந்த மந்திரப் பயன்பாடு 'மூளைக்கணினி இடைமுகம்' என்று அழைக்கப்படுகிறது.

**எதிர்காலத் திட்டங்கள்**

மூளைநரம்பு நோய்களால் பார்வை, பேச்சுத்திறன், கைகால் செயலிழப்பு ஏற்பட்டவர்கள் தங்களது சிந்தனையில் உள்ளதை வெளிப்படுத்தவும், விரும்பிய செயல்களைச் சிந்திப்பதன் மூலம் மட்டுமே நடைமுறைப்படுத்தும் வகையில் நியூராலிங்க் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் மருத்துவத் துறைக்கு அப்பாற்பட்ட பல நோக்கங்களுடன் இது விரிவுபடுத்தப்பட இருப்பதாக எலான் மஸ்க் தெரிவித்துள்ளார்.

மூளையில் சில் பொருத்தப்பட்ட இரண்டு நபர்கள், தங்களுக்கிடையே சிந்தனைகளைத் தூரத்திலிருந்தவாறே பரிமாறிக்கொள்ள முடியும். இதனால்தான் இந்தத் திட்டத்துக்கு 'டெலிபதி' என்று பெயரிடப்பட்டுள்ளது. ஸ்டான்லி குப்ரிக்கின் 'தி ஷைனிங்' (1980) திரைப்படத்தில் இப்படியான அறிவியல் தொடர்புகள் இல்லாமலேயே, இதை ஓர் அமானுஷ்ய வித்தை போலச் சித்திரித்திருப்பதை சினிமா ரசிகர்கள் கவனித்திருக்கலாம்.

மூளைக்கணினி இடைமுகத்தின் மூலம், சிந்திப்பதைச் செயற்கை நுண்ணறிவுக்கு அனுப்பி, செயலிகள் மூலம் கட்டுரைகூட எழுதவைக்க முடியும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. எதிர்காலத்தில் ஆயிரக்கணக்கான சிலிக்கான் துகள்களை மூளைக்குள் செலுத்தி, அதன்மூலம் நரம்புகளின் வேலைகளை வெளியிலிருந்தே கட்டுப்படுத்தும் திட்டமும் உள்ளது. இதற்கு நரம்புத் தூசுகள் என்றழைக்கப்படும் தூசுபோன்ற சிலிக்கான் சில்லுகளைப் பயன்படுத்தவிருப்பதாகவும் தெரிகிறது. உச்சகட்டமாக, ஒருவர் உலகைப் புரிந்துகொள்ளும் விதத்தையே மாற்றமுடியும் என்பது ஆச்சரியமான, அதிர்ச்சிகரமான தகவல்.

மூளையில் சில் பொருத்தப்பட்ட இரண்டு நபர்கள், தங்களுக்கிடையே சிந்தனைகளைத் தூரத்திலிருந்தவாறே பரிமாறிக்கொள்ள முடியும். இதனால்தான் இந்தத் திட்டத்துக்கு 'டெலிபதி' என்று பெயரிடப்பட்டுள்ளது.

**காத்திருக்கும் சவால்கள்**

இந்த உயிரிச் சில்லை மனித மூளைக்குள் பதிக்கும் முதல்கட்ட வேலை ஜனவரி 29ஆம் திகதியன்று வெற்றிகரமாக நடந்துள்ளது. இனி அது அனுப்பும் அலைக்கற்றைகளைக் குறிவிளக்கம் செய்து, நினைத்த காரியத்தைச் சாத்தியமாக்குவது பெரும் சவாலானது. இந்த மூளைக்கணினி இடைமுகத்தை நிரப்புவது செயற்கை நுண்ணறிவுதான்.

இதனால் எலான் மஸ்க்கின் இந்தப் பரிசோதனை முயற்சி ஒருவேளை சாத்தியமானாலும், கூகிள் போன்ற தேடுதளங்களில் நாம் ஒன்றைத் தேடும்போது, செயற்கை நுண்ணறிவின் மூலம் தரப்படும் பரிந்துரைகள் சில நேரம் தவறாக இருப்பதைப் போல், மூளைக்கணினி இடைமுகத்தின் செயற்பாடுகள் ஒரு சதவீதம் இருந்துவிட்டால்கூட இதன் விளைவு மோசமாக இருக்கும் என்று ஆராய்ச்சியாளர்கள் எச்சரிக்கின்றனர்.

இந்தத் திட்டத்தின் கீழ் இயங்கவிருக்கும் சுமார் 50 வகையான பணியாளர்களில் ஒருவர் மட்டுமே நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணராவார். மற்ற எல்லா பணியாளர்களும் மென்பொருள் தொழில்நுட்ப நிபுணர்கள்தாம். எனவே, இத்திட்டத்தை ஆய்வகப் பரிசோதனையிலிருந்து மருத்துவத் துறைக்கு மாற்றும்போது பல மருத்துவ நெறிமுறைச் சிக்கல்களுக்கு உள்ளாக வாய்ப்புள்ளது.

**மனநலம் சந்திக்கவிருக்கும் சவால்கள்:**

அறிவியல் தொழில்நுட்பங்கள் முன்னேறும் போதெல்லாம் அதற்கேற்ப மனநலப் பாதிப்புகளின் அறிகுறிகளும் புதிய பரிமாணங்களை எடுத்துக்கொள்வது வழக்கம்.

வேற்றுக்கிரகவாசிகள் தங்களுடன் தொடர்புகொள்கிறார்கள், தங்கள் சிந்தனைகளைப் பிறர் அறிந்துகொள்கிறார்கள் அல்லது அவை வெளியே ஒளிபரப்பப்படுகின்றன, தூங்கும்போது தங்களது மூளைக்குள் வைக்கப்பட்ட சில்லு மூலமாகத்தாங்கள் கண்காணிக்கப்பட்டுக் கட்டுப்படுத்தப்படுகிறோம் என்றெல்லாம் மனச்சிதைவு நோயால் பாதிக்கப்பட்டவர்கள் மனப்பிறழ்வுக்கு ஆளாவதுண்டு.

ஆனால், நியூராலிங்க் திட்டத்தின் மூலம் இது உண்மையில் நடக்கச் சாத்தியம் ஏற்படுமாயின் நிஜத்திலிருந்து மனப்பிறழ்வை வித்தியாசப்படுத்துவது சவாலாக இருக்கும். சிந்தனைகளில் தோன்றும் எதிர்மறை எண்ண ஓட்டங்களெல்லாம் நிஜத்தில் நடந்துவிடுமோ என்ற பதற்றத்துக்கு ஆளாவது, எண்ணச் சுழற்சி நோயின் ஓர் அறிகுறியாகும். ஆனால், சிந்திப்பதே செயற்பாட்டுக்குச் சமம் என்பது நியூராலிங்க் மூலம் சாத்தியமானால், திறன்பேசிகள், செயற்கை நுண்ணறிவு போன்ற தொழில்நுட்ப முன்னேற்றங்களால் பல சவால்களை எதிர்கொண்டுவரும் மனநலத்துறை, இன்னும் அதிகச் சவால்களை சந்திக்க நேரிடும்.

**எதிர்பார்ப்பும் விமர்சனங்களும்:**

எலான் மஸ்க்கை ஆதரித்துப் பலர் பேசினாலும் பல விமர்சனங்களையும் அவர் எதிர்கொண்டிருக்கிறார். டெஸ்லா கார்கள் மூலம் ஓட்டுநர் இல்லாப் போக்குவரத்து, ஸ்பேஸ் எக்ஸ் மூலம் விண்வெளி ஆய்வுகள், புவி வெப்பமாதலிலிருந்து விடுவிக்கும் முயற்சிகள் முதல் நியூராலிங்க் திட்டம் வரை எல்லாமே அவரது விசித்திரமான அல்லது பிரம்மாண்ட மனநிலையின் வெளிப்பாடுகள் என்று சில அறிவியலாளர்கள் விமர்சிக்கின்றனர். கண்ணதாசன் பாடலில் சொன்னதுபோல, கடவுளின் இடத்தை மனிதனின் மனதிலிருந்து எடுக்கும் 'எதிர் கடவு'ளை உருவாக்கும் முயற்சியாக இதைக் கருதி இறையியலாளர்களும் எதிர்ப்புக் காட்டிவருகிறார்கள். 'நியூராலிங்க் சில்லு' மூளையில் பொருத்தப்பட்டுள்ள நபரின் உடல்நிலை சீராக இருப்பதாகவும், விரைவில் பிரத்யேகச் செயலிகள் மூலம் அவரது சிந்தனை ஓட்டங்கள் கண்காணிக்கப்பட இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஒருவேளை இம்முயற்சி வெற்றிகரமாக முடிந்தால் மருந்துகள், அறுவைச் சிகிச்சைகளால் பயன்பெற முடியாமல் இயன்முறை மருத்துவத்தை மட்டும் நம்பியிருக்கும் உறுப்புகள் செயலிழந்த, ஆனால் சிந்திக்கும் திறனுள்ள நபர்களுக்குப் வரப்பிரசாதமாக அமையலாம்.



நன்றி:
இந்து தமிழ் திசை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரை அடக்க முயலும் பௌத்த ஏகாதிபத்தியம்!

## விக்னேஸ்வரன் எம்.பி. கண்டனம்

யாழ்ப்பாணம், மார்ச் 13

வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் பூசை வழிபாடுகளில் ஈடுபட்டிருந்தவர்கள் வலுக்கட்டாயமாகப் பொலிஸாரால் அகற்றப்பட்டுச் சிலரைக் கைது செய்த சம்பவம் சிங்கள - பௌத்த ஏகாதிபத்தியத்தின் கீழ் தமிழ்மக்கள் வாழ்கின்றார்கள் என்ற பேருண்மையை மீண்டும் வெளிப்படுத்தி யுள்ளது என்று தமிழ்மக்கள் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் க.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அமைச்சர் விதுர விக்ரமநாயக்கவின் ஒரு கூற்றை வாசித்தேன். அதில் இலங்கையின் புராதன நாகரிகம் சம்பந்தமான வரலாறுகளை அடுத்த சந்ததிக்கு கொண்டு போவதே தமது சமய கலாசார அமைச்சின் பிரதான நோக்கமாக உள்ளது என்றும், வெடுக்கு நாறிமலை, வனப்பிரதேச பரிபாலன திணைக் களத்தின் நிர்வாகத்தின் கீழ் உள்ளதுடன் அது ஒரு தொல்பொருள் பகுதி என்றும் கூறியுள்ளார்.

வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலய சம்பவம் வெறும் தொல்பொருள் பாதுகாப்பு விடயமன்று.

அரசாங்கத்துடன் தொடர்புடைய சிங்கள - பௌத்த நிறுவனங்கள் மற்றும் பௌத்த பிக்குகள் வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களின் காணிகளைக் கையகப்படுத்தும் நீண்டகாலத் தந்திரத் திட்டத்தின் வெளிப்பாடே இது - என்றுள்ளது.

(எ-66)

**மாபிள் வேலை**

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்துத் தரப்படும்.
ஒரு சதுர அடி - 100.00 ரூபாய்.
077 334 1281

**வாடகைக்கு**

திருநெல்வேலி - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு அருகாமையில் அறைகள் வாடகைக்கு உண்டு.
தொடர்பு:- 076 759 8708

**வேலையாட்கள் தேவை**

யாழ். நகரில் இயங்கும் வெதுப்பகம் ஒன்றிற்கு பெண் சுத்திகரிப்பாளர் தேவை. அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.
077 713 1594, 021 222 9402
(CS/54345) J-1

## கண்ணீர் அஞ்சலி


### சபாபதிப்பிள்ளை தியாகராசா

யாழ் போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தர்களாக கடமையாற்றும் திருமதி நி.வையேந்திமாலா, ச.ஜெயசித்திராதேவி ஆகியோரின் அன்புத் தந்தை சபாபதிப்பிள்ளை தியாகராசா அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

தாதியர் நலன்புரி சங்கம்
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 06 . 05 . 1936 — மறைவு 10 . 03 . 2024



### காசிப்பிள்ளை தளையசிங்கம் (வைத்திலிங்கம்)

(முன்னாள் கிராம சேவையாளர் - அல்லைப்பிட்டி, சரவணை, கோண்டாவில் , யாழ்ப்பாணம்)

யாழ்.புங்குடுதீவு 4ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், அரசடி வீதியை வசிப்பிடமாகவும், பிரான்ஸ் Paris Epone ஐ தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட காசிப்பிள்ளை தளையசிங்கம் அவர்கள் கடந்த (10.03.2024) ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை - செல்வநாயகி தம்பதியரின் பாசமிகு மூத்த புதல்வனும், காலஞ்சென்றவர்களான சபாரெத்தினம் (பெரியசபா) - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சபாராணி அவர்களின் ஆருயிர்க் கணவரும், ஞானச்சந்திரன் (சந்திரன்) அவர்களின் பாசமிகு தந்தையும், பத்மசுகி அவர்களின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான சிவஞானேஸ்வரி, திருலோகவதி, இராஜேஸ்வரன் மற்றும் சாந்தசிவரூபி (இலங்கை), காலஞ்சென்ற ரேவதி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், சர்வானந்தன், காலஞ்சென்ற பங்கயற்செல்வி மற்றும் சபாமணி, காலஞ்சென்ற காந்திசொரூபன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்றவர்களான நாகராசா, செல்வரெத்தினம் மற்றும் சாந்தகுமாரி (பிரான்ஸ்), காலஞ்சென்ற சாந்தலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை, நவரெட்ணராஜா ஆகியோரின் அன்புச் சகலனும், நிதர்ஜன் (பிரான்ஸ்), நிரோஜினி (பிரான்ஸ்), நிவேதனா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு அப்பப்பாவும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


11/8,பண்டாரக்குளம் லேன்,
நல்லூர்.

தகவல்:
குடும்பத்தினர்
077 995 5895

(CS 28177) S-1

## மரண அறிவித்தல்

பிறப்பு 18 . 06 . 1946 — இறப்பு 12 . 03 . 2024



### சிவகுருநாதன் பாலகிருஷ்ணன்

(ஓய்வுபெற்ற பொறியியலாளர் இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனம்)

கொழும்பைப் பிறப்பிடமாகவும் அரியாலையை வதிவிடமாகவும் கொண்ட சிவகுருநாதன் பாலகிருஷ்ணன் அவர்கள் 12.03.2024 நேற்று இயற்கை எய்தினார். அன்னார் காலஞ்சென்ற சிவகுருநாதன் - மற்றும் சரஸ்வதி தம்பதியினரின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற சபாரத்தினம் - மற்றும் லீலாவதி தம்பதியினரின் பாசமிகு மருமகனும் சுரேந்தினியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம், ராசலட்சுமி, பாலசிங்கம், விஜயலட்சுமி மற்றும் ஜெயலட்சுமி, பாக்கியலட்சுமி, பாலச்சந்திரன், பாலேந்திரன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் தனுஷன் (பொறியியலாளர்), நிலாந்தி (விரிவுரையாளர்), சாரங்கி (கணக்காளர்), அனோஜன் (வங்கியாளர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தருஷன், தமிழ்மொழி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆதிரை, அகரன், பிரணவி மற்றும் கிரிஷ் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை வியாழக்கிழமை (14.03.2024) மாலை 4.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

304, கண்டிவீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
021 222 7753

(CS/28173) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 05 . 06 . 1933 — மறைவு 12 . 03 . 2024




### திருமதி தவமணி கனகரத்தினம்

கொக்குவிலை பிறப்பிடமாகவும் கே.கே.எஸ் வீதி கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவமணி கனகரத்தினம் (பெயின்ரர்) அவர்கள் நேற்று 12.03.2024 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை (17.03.2024) காலை 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கே.கே.எஸ் வீதி
கோண்டாவில் மேற்கு

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**புதிய மாணவர் அனுமதி - 2024 பெப்ரவரி நுழைவு**

## UNDERGRADUATE DEGREE PROGRAMMES

# COMPUTING | BUSINESS

**SLIIT NORTHERN UNI** யின் நான்கு வருட பட்டப்படிப்புகள்.
கல்வி அமைச்சினால் அனுமதிக்கப்பட்ட பட்டப்படிப்புகள்.
தற்போது யாழ்ப்பாணத்தில்,

**BSc(Hons) in Information Technology Specialising in :**

- Information Technology
- Software Engineering
- Cyber Security
- Interactive Media
- Computer Systems & Network Engineering
- Information Systems Engineering
- Data Science

**BBA(Hons) Specialising in :**

- Business Analytics
- Marketing Management
- Accounting & Finance
- Logistics & Supply Chain Management

**University of Bedfordshire (UK) Programs**

- Foundation in Information Technolgy.
- BSc (Hons) Computer Science and Software Engineering.
- BSc (Hons) Computer Networking.
- Foundation in Business Adminstration.
- BA (Hons) Business Administration.

**நினைவில் கொள்ள வேண்டிய திகதி**

தகுதிகாண் பரீட்சை
**16 MARCH 2024**
**(10:00AM TO 11:00AM)**

**மொழி மூலம்**
தமிழ், ஆங்கிலம், சிங்களம்

NORTHERN UNI
Call us now:
**077 147 1471**
northernuni.lk
apply@northernuni.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியலில் விக்னேஸ்வரன் கத்துக்குட்டி!



கொழும்பு, மார்ச் 13

விக்னேஸ்வரன் என்பவர் அடிப்படைவாத நோக்கில் அரசியலை முன்னெடுப்பவர். அரசியலில் அவர் முதிர்ச்சியடைந்த நபரும் கிடையாது - என்று கடுமையாக விமர்சித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் பொன்சேகா.

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் க.வி.விக்னேஸ்வரனால் முன்வைக்கப்பட்டுள்ள கருத்துத் தொடர்பிலேயே பொன்சேகா இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விக்னேஸ்வரனின் கருத்துகள் முதிர்ச்சியடையாத தன்மை மிக்கவை. அத்துடன் விக்னேஸ்வரன் அடிப்படைவாதக் கொள்கைகளுக்கு அமைய அரசியலை முன்னெடுப்பவர். வடக்கு- கிழக்கில் முதிர்ச்சியடைந்த அரசியல்வாதிகள் பலர் உள்ளனர். அவர்கள் இவ்வாறு முட்டாள்தனமான கருத்துகளை முன்வைக்கமாட்டார்கள்.

தமிழ் மக்களுக்கு நான் ஒருபோதும் துரோகம் இழைத்தது கிடையாது. போர் முடிவுக்கு வந்ததால் அவர்கள் சுதந்திரமாக வாழக்கூடிய சூழல் உருவாகியுள்ளது. 2010ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போது வடக்கில் எனக்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் வாக்குகள் கிடைக்கப்பெற்றன. அதுவும் போர் முடிவடைந்து குறுகிய காலப் பகுதிக்குள் இவ்வாறு பெருமளவான மக்கள் என்னை ஆதரித்தனர். ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் நடந்த பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே 85 ஆயிரம் வாக்குகள்தான் கிடைத்தன. வடக்கு மக்களின் ஆசீர்வாதம் எனக்கு இருந்தது-என்றார்.

(அ-ம-44)


ANGEL INTERNATIONAL SCHOOL
MANIPAY

**English classes for Adults**

*Easiest and quickest way to learn English language skills.*

1.Spoken
2.Written
3.Reading
4.Listening
5.Preparation for
a.IELTS Life skills
b.Academic
c.General

Commencing from 29.04.2024 In Jaffna & Manipay

Duration-6 Months
Registration -2,000/-
Course fee -30,000/-

The certificate will be issued based on an exam after the completion of the course.
Jaffna- 5.00pm-7.00pm (Tuesday, Thursday & Friday)
Manipay- 9.00am-11.00am (Monday, Wednesday, & Friday)

For more Information visit: Angel International School Manipay/Jaffna
021-225-5628/0774034481


## 03ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 08.07.1950

உதிர்வு 15.02.2021

**அமரர் சபாபதிப்பிள்ளை முருகேசு சபாரத்தினம்**

அன்பின் திருவுருவே - அப்பா
எட்ட முடியாத தொலைவு சென்று
ஆண்டுகள் ஓராயிரம் ஆகலாம்
காலங்கள் விடைபெறலாம்
நெஞ்சில் பதிந்த நினைவலைகள் என்றென்றும்
நம்மை விட்டு நீங்காது

89, அம்மன் வீதி, திருநெல்வேலி (CS 28172) S-1 குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 23 . 02 . 1941



மறைவு 09 . 03 . 2024

**பரமநாதன் சிவபாக்கியம்**

சாவகச்சேரி பூங்கங்கேணியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பரமநாதன் சிவபாக்கியம் அவர்கள் கடந்த (09.03.2024) சனிக்கிழமை அன்று இரவு இறைவனடி சேர்ந்தார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகளும், நாகலிங்கம் - இரத்தினம் தம்பதியரின் ஆசை மருமகளும், காலஞ்சென்ற பரமநாதன் (முன்னாள் இ.போ.ச.ஊழியர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராஜலக்ஷ்மி, சிவநாதன், நாகேஸ்வரி மற்றும் செல்வராணி, கேதீஸ்வரி, விஜயலக்ஷ்மி, சொரூபராணி, சிவகணேஷநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சந்திரவதனன் (மோகன் London) அவர்களின் அன்புத் தயாரும், சாலினி அவர்களின் அன்பு மாமியாரும், அபிகேய்ல், குளோயி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.03.2024) புதன்கிழமை காலை 08.00 மணிக்கு ஆரம்பித்து, பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
புகையிரத நிலைய ஒழுங்கை, சாவகச்சேரி. குடும்பத்தினர் 076 891 6288

(CR 42099) S-1

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில் 25.06.1939

விண்ணில் 12.02.2024

**அமரர் செல்லையா இராசலிங்கம்**

**(காரைநகர் அல்லின் வீதி)**

12.02.2024 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் மரணச் செய்தியறிந்து நேரிலும் தொலைபேசி ஊடாகவும் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், மலர் வளையம் வைத்து அஞ்சலித்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

மலர்கள் நிறைந்த மரமாகி
மாநிலத்தில் நமது குடும்பம் மிளிர
வேர் போன்று மண்ணுள் மறைந்து
நல் விருட்சத்திற்காக உழைத்த அன்புத் தெய்வம்
நேற்றுவரை நேசத்துடன் இருந்தோம்
இன்று உமது முகம் காணவில்லை
ஈசனடி வேண்டுகின்றோம்
உங்கள் ஆன்மா சாந்தியடைய
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

அல்லின் வீதி,
காரைநகர். (CS/54357) J-1 குடும்பத்தினர்.

## மணிவிழா வாழ்த்து




**திரு. அருணாசலம் மனோரஞ்சிதன்**

ஆசிரியர் ஆலோசகர், ஆரம்பக்கல்வி - SLTAS – 1
Primary Education, Primary Trained, BA, PGDE, MEd.
கலைமாணி (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
ஆசிரியர் பயிற்சி - ஆரம்பக்கல்வி, பட்டப்பின் கல்வி டிப்ளோமா
கல்வி முதுமாணி - தேசிய கல்வி நிறுவகம், இலங்கை

- ஆரம்ப, இடைநிலைக்கல்வி - யா/ மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி.(தரம்1-11)
- உயர்கல்வி - யா/வசாவிளான் மத்திய கல்லூரி. (உயிரியல் விஞ்ஞானம் - தரம் 12-13)

சேவையும் சேவைக் காலமும்

| இல. | சேவை | நிலையம் | காலம் |
|---|---|---|---|
| 01 | ஆசிரியர் (Teacher) | யா/ மட்டுவில் வடக்கு அ.த.க.பாடசாலை | 22.03.1990 - 02.01.2000 |
| | | யா/ மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி. | 03.01.2000 - 01.01.2008 |
| 02 | ஆசிரியர் ஆலோசகர் (ஆரம்பக் கல்வி) (ISA,Primary) | வலயக் கல்வி அலுவலகம் தென்மராட்சி. | 02.01.2008 - 25.10.2015 |
| 03 | உதவிக் கல்விப் பணிப்பாளர் (ADE Primary) (ஆரம்பக் கல்வி) | வலயக் கல்வி அலுவலகம் தென்மராட்சி. | 26.10.2015 - 25.02.2018 |
| 04 | தொழில் வழிகாட்டல் ஆலோசனை அதிகாரி (CGO) | வரணி, ஆசிரியர் வாண்மை விருத்தி மத்திய நிலையம். வலயக் கல்வி அலுவலகம், தென்மராட்சி. | 26.02.2018 - 01.01.2022 |
| 05 | ஆசிரியர் ஆலோசகர் - SLTAS –1 (ஆரம்பக் கல்வி) | வலயக் கல்வி அலுவலகம், தென்மராட்சி. | 02.01.2022 - 06.03.2024 |

வாழ்த்துவோர்: ஆரம்பக்கல்வி அபிவிருத்திப் பிரிவு
ஆசிரியர் குழாம் - தென்மராட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் துணைத்தூதரகத்தில் இன்று பயஸ், முருகன், ஜெயக்குமார் முன்னிலை

சென்னை, மார்ச் 13

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கிலிருந்து விடுதலையான முருகன், ரொபேட் பயஸ் மற்றும் ஜெயக்குமார் ஆகியோர் இலங்கைத் துணைத்தூதரகத்தில் இன்று முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர்.

ராஜீவ்காந்தி கொலை வழக்கிலிருந்து விடுதலைபெற்றபோதிலும், இலங்கையர்கள் என்பதால் அவர்கள் தொடர்ந்தும் சிறப்பு முகாமுக்குள்ளேயே அடைக்கப்பட்டுள்ளனர். முகாமுக்குள் அடிப்படை வசதிகள்கூட இல்லை என்றும் முகாம் சிறைச்சாலையைவிட மோசமாக உள்ளதாகவும் சாந்தன் உயிரிழந்தமைக்கு முகாம் வாழ்வும் ஒருகாரணம் என்றும் பலரும் பல்வேறு குற்றச்சாட்டுகளைச் சுமத்தியிருந்தனர்.

இதையடுத்து, முருகனின் மனைவி நளினி, தனது கணவரை சகல நாடுகளுக்குமான கடவுச்சீட்டைப் பெறுவதற்காக இலங்கைத் தூதரகத்தால் நடத்தப்படும் நேர்முகத் தேர்வில் பங்கேற்பதற்கு அனுமதிக்குமாறு, மாவட்ட ஆட்சியருக்கு உத்தரவிடக்கோரி சென்னை மேல் நீதிமன்றில் நீதிப்பேராணை மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

குறித்த மனு நேற்று சென்னை மேல் நீதிமன்றில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே, சிறப்பு முகாமில் உள்ள மூவரும் கடவுச்சீட்டுகளைப் பெறும் நடவடிக்கைக்காக நாளை (இன்று) இலங்கைத் துணைத் தூதரகத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர் என்று மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார். (அ-ம)

## யாழ். பல்கலை ஊழியர்கள் அடையாள வேலைநிறுத்தம்

யாழ்ப்பாணம், மார்ச் 13

ஊதிய உயர்வு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஊழியர் சங்கத்தால் அடையாள வேலைநிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

பல்கலைக்கழக கல்விசாராப் பணியாளர்களின் சம்பள முரண்பாடு, சம்பள அதிகரிப்பு மற்றும் அவர்களைப் பாதிக்கும் பிரச்சினைகளுக்கு உரியகால அவகாசங்கள் வழங்கப்பட்டும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும், அரசாங்கமும் இதுவரை தீர்வை வழங்காமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், உடனடித் தீர்வை வலியுறுத்தியும், அனைத்துப் பல்கலைக்கழகங்களின் கல்விசாராப் பணியாளர்கள் நேற்றுச் செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிமுதல் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்கமைய, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் நேற்று நண்பகல் 12 மணியிலிருந்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இன்றும் போராட்டம் தொடரவுள்ளது. (அ-ம-66)

# நாணய நிதியத்துடன் ஜே.வி.பி. நாளை பேச்சு!

கொழும்பு, மார்ச் 13

சர்வதேச நாணய நிதியப் பிரதிநிதிகளுக்கும், ஜே.வி.பி.யினருக்கும் இடையிலான சந்திப்பொன்று நாளை இடம்பெறவுள்ளது என்று ஜே.வி.பி.யின் நிறைவேற்றுக் குழு உறுப்பினரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'ரணில் விக்கிரமசிங்கவுடன் சென்று சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சு நடத்தவேண்டிய தேவைப்பாடு எமக்குக் கிடையாது. சர்வதேச நாணய நிதியத்துக்கு கூற வேண்டியவற்றை நாம் நேரில் கூறிவிட்டோம். எதிர்காலத்தில் மேலும் சில விடயங்களைக் கூறவும் உத்தேசித்துள்ளோம். எதிர்வரும் 14ஆம் திகதி சந்திப்போம். அப்போதும் இதுபற்றி எடுத்துரைப்போம். எனவே, ரணில் விக்கிரமசிங்க எமக்குத் தூதுசெல்ல வேண்டியதில்லை. நாம் பேச்சு நடத்த சந்தர்ப்பமும் கோரவில்லை' - என்றார்.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியும் சர்வதேச நாணய நிதியத்துடன் தனியாகப் பேச்சு நடத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

### கூரிய...

சட்டமருத்துவ அதிகாரி உ.மயூரதன் இளைஞரின் இறப்புக்கான காரணம் தொடர்பில் நேற்று அறிக்கையிட்டுள்ளார். அந்த அறிக்கையிலேயே, கூரிய ஆயுதங்களால் கொடூரமாகச் சித்திரவதை செய்யப்பட்டும், மூச்சுக் குழாய்க்குள் குருதி சென்றதாலும்தான் இறப்புச் சம்பவித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-ம-26)

### பிரதம...

கடிதங்களை ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஜனாதிபதிச் செயலகத்தில் வைத்து நேற்றுக் கையளித்தார். (அ-ம-26)

### தொல்லியல்...

கடந்த எட்டாம் திகதி சிவராத்திரி தினத்தன்று வெடுக்குநாறிமலையில் வழிபாட்டில் ஈடுபட்ட 50க்கும் மேற்பட்டவர்கள் பொலிஸாரின் பலப் பிரயோகத்தால் இரவுப் பொழுதில் வெளியேற்றப்பட்டனர். 'ஓம் நமச்சிவாய' மந்திரத்தை உச்சரித்தபடி சிவ வழிபாட்டில் ஈடுபட்ட 8 பேர் கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் கடந்த 9ஆம் திகதி வவுனியா நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டபோது, பொலிஸ் விசாரணைகள் முற்றுப்பெறாததைக் காரணம் காட்டி நேற்றுவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

நேற்று இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்காக எடுக்கப்பட்டது. காலை 9 மணி முதல் மூன்று தடவைகள் குறித்த வழக்கு விசாரணைகள் இடம்பெற்றன. தொல்பொருள் திணைக்களத்தினர், சந்தேகநபர்கள் அங்குள்ள தொல்பொருள் சின்னங்களைச் சேதப்படுத்தியதாக மன்றின் கவனத்துக்கு அறிக்கையிட்டனர்.

இதையடுத்து குறித்த 8 பேரையும் எதிர்வரும் 19ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. சந்தேகநபர்களுக்கு மறியல் நீடிக்கப்பட்ட அறிவிப்பு வெளியானதும், நீதிமன்றத்துக்கு முன்பாக நின்ற அவர்களுடைய உறவினர்கள் கண்ணீர்மல்கிக் கதறியழுதனர்.

ஆலய பூசகர் உள்ளிட்ட 8 பேர் சார்பில் ஜனாதிபதிசட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், சட்டத்தரணிகளான சிறீகாந்தா, க.சுகாஷ், தி.திருஅருள், கிறிஸ்ரீனா, ஜிதர்சன், சஜித்தா, சாருகேசி, விதுசினி, கீர்த்தனன், யூஜின் ஆனந்தராஜா, கொன்சியஸ் உள்ளிட்ட பலரும் நீதிமன்றில் முன்னிலையாகினர். (அ-ம-110-18)

### அடைக்கலம்...

இதுதொடர்பில் உயிரிழந்தவரின் மனைவி தெரிவித்ததாவது:-

"என்னையும் என் கணவரையும் காரில் வந்த கும்பல் கடத்து முற்பட்டபோது நாம் தப்பித்து கடற்படை முகாமுக்குள் ஓடினோம். எங்களைக் காப்பாற்றும்படி கடற்படையிடம் அழுது மன்றாடினோம். ஆனால், கடற்படையினர் எமது உயிரைக் காப்பாற்ற முன்வரவில்லை. மாறாக அவர்கள் துப்பாக்கியால் எம்மை அடித்து விரட்டினார்கள். அதனால்தான் என்னையும், கணவரையும் அந்தக் கொலைகாரக்கும்பல் கடத்திச் செல்லமுடிந்தது. கடற்படையினர் மனிதாபிமானத்தோடு நடந்திருந்தால் எங்களுக்கு அடைக்கலம் தந்திருந்தால் என் கணவரை கொன்றிருக்கமுடியாது. கணவரின் சாவுக்கு அவர்களும் ஒருவகையில் காரணமே" என்று கதறியழுதபடி கூறினார்.

இறந்தவரின் சடலம், உடற்கூற்றுப்பரிசோதனையின் பின்னர் குடும்பத்தினரிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டது.

இந்தக் கொலையுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் நால்வர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். ஏனையவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களைக் கைதுசெய்யும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜகத் விஷாந்த தெரிவித்துள்ளார். (அ-ம-26)

### வெடுக்குநாறி...

வெடுக்குநாறிமலையில் சிவராத்திரி தினத்தன்று இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காகத் தனிக்குழு அமைக்கப்படவேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்வைத்த கோரிக்கையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக்கொண்டுள்ளார்.

கடந்த 8 ஆம் திகதி இரவு வெடுக்குநாறி ஆதிசிவன் ஆலயத்தில் சிவராத்திரி வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்போது, இரவு நேரத்தில் வெடுக்குநாறி மலையில் வழிபாடுகளை மேற்கொள்ள முடியாது என்று தெரிவித்த பொலிஸார், வழிபாட்டில் ஈடுபட்டவர்களில் எட்டுப் பேரை பலப்பிரயோகத்தின் அடிப்படையில் கைதுசெய்திருந்தனர். இந்த விவகாரம் தமிழர் தாயகத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் பல்வேறு அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பில் விசாரிப்பதற்காகத் தனிக்குழு அமைக்கப்படவேண்டும் என்று டக்ளஸ் தேவானந்தாவால் விடுக்கப்பட்ட கோரிக்கையே ஜனாதிபதியால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. (அ-ம-20)

### ஈழத்...

இந்தியாவில் புதிய குடியுரிமைத் திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. எனினும் ஈழத்தமிழர்களுக்கு குடியுரிமை வழங்குவது தொடர்ந்தும் மறுக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகளிலிருந்து இந்தியாவில் குடியேறிய முஸ்லிம் அல்லாத மதப் பிரிவினருக்குக் குடியுரிமை வழங்குவதற்கு வழிவகை செய்யும் வகையில் இந்தத் திருத்தச் சட்டம் உருவாக்கப்பட்டது.

குடியுரிமைச் சட்ட திருத்தச் சட்டம் கடந்த 2019ஆம் ஆண்டு டிசெம்பரில் இந்திய நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு குடியரசுத் தலைவரின் ஒப்புதலும் பெறப்பட்டது. என்றாலும், எதிர்க்கட்சிகள் மற்றும் சில மாநிலங்களின் கடுமையான எதிர்ப்பால் இதனை அமுல்படுத்தும் அறிவிப்பை இந்திய அரசாங்கம் தாமதப்படுத்தி வந்தது. இந்த நிலையில் இந்தியாவில் மக்களவைத் தேர்தல் நெருங்கி வரும் சூழலில் புதிய குடியுரிமைத் திருத்தச்சட்டம் நேற்றுமுன்தினம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும், முஸ்லிம்களுக்கும் இலங்கைத் தமிழர்களுக்கும் இந்தியக் குடியுரிமை தொடர்ந்தும் மறுக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கும் குடியுரிமை வழங்கப்படவேண்டும் என்று தற்போது பரவலாக வலியுறுத்தப்பட்டு வருகின்றது. (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் பேரெழுச்சியே பிரச்சினைக்குத் தீர்வு!

## வேலன் சுவாமிகள் அறைகூவல்

**யாழ்ப்பாணம், மார்ச் 13**

**தமிழர்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தரமான தீர்வொன்று தேவையெனில், அதற்கு வடக்கு - கிழக்குத் தழுவிய போராட்டங்களே ஒரேதீர்வு என்று சிவகுரு ஆதீன முதல்வர் வேலன் சுவாமிகள் அறைகூவல் விடுத்துள்ளார்.**

வெடுக்குநாறிமலை சிவராத்திரி வழிபாடுகளில் கைதானவர்களின் வழக்கு வவுனியா நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. வழக்கைப் பார்வையிடுவதற்காக வவுனியாவுக்கு வருகைதந்த அவர், வழக்கின் பின்னர் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சிறிலங்காப் பொலிஸாரின் சிறுபான்மை மக்களுக்கு எதிரான அடாவடித்தனம் எல்லைகடந்து செல்கின்றது. வெடுக்குநாறிமலையில் சிவவழிபாட்டில் ஈடுபட்டவர்கள் மீது பொய்யான குற்றச்சாட்டுகள் சோடிக்கப்பட்டுக் கைதுசெய்யப்பட்டதுடன், அது தொடர்பில் முற்றிலும் பிழையானதும் பொய்யானதுமான அறிக்கையே பொலிஸாராலும் தொல்பொருள் திணைக்களத்தினராலும் நீதிமன்றத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. அத்துமீறல்கள் அனைத்தையும் முன்னெடுத்தது தொல்பொருள் திணைக்களத்தினரே. கைதுசெய்யப்பட்டவர்கள் விளக்கமறியலில் சீரான உணவின்றி வேதனைகளை அனுபவித்து வருகின்றனர். அவர்களது உறவினர்கள் படும் பாட்டைப் பார்க்கும்போது வார்த்தைகள் வரவில்லை. இந்தச் சூழ்நிலையில் நாம் ஒரு மக்கள் எழுச்சிப்போராட்டத்தை வடக்கு - கிழக்கு தழுவிய வகையிலே விரைவில் ஒன்றுதிரண்டு முன்னெடுக்கவேண்டும். பேரெழுச்சிப்போராட்டம் ஒன்று வவுனியா நகரில் விரைவில் நடத்தப்படும். அதற்கு அனைவரது ஆரதவினையும் வேண்டி நிற்கின்றோம் - என்றார். (அ-ம-26-110)

# பொலிஸாரின் செயற்பாடு நல்லிணக்கத்துக்கு ஊறு

## சந்திரகுமார் சுட்டிக்காட்டு

நாட்டில் இன நல்லிணக்கம் தொடர்பாக அதிகம் வலியுறுத்தப்படும்நிலையில், நாட் டின் தொல்லியல் மற்றும் பொலிஸ் திணைக்க ளங்கள் அவற்றுக்கு ஊறுவிளைவிக்கின்றன என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும், சமத்துவக் கட்சியின் பொதுச்செயலாளருமான மு. சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

வெடுக்குநாறி ஆதிசிவன் ஆலயத்தில் பொலிஸார் மேற்கொண்ட அடாவடித்தனமான செயற்பாடுகளைக் கண்டித்து விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

பொலிஸாரின் செயற்பாடுகள் பௌத்த, சிங்கள

மேலாதிக்க மனநிலையின் வெளிப்பாடாகவே இருக்கின்றது. புனிததலம் ஒன்றில் சப்பாத்துக் கால்களுடன் வெறுக்கத்தக்க வகையில் பொலிஸார் நடந்துகொண்டுள்ளனர். இந்த நிலை மாற்றப்பட வேண்டும்.

வெடுக்குநாறி ஆதிசிவன் ஆலயத்தில் நடந்த சம்பவங்கள் போன்று இனியொரு சம்பவம் இடம் பெறாத நிலை உருவாக்கப்படல் வேண்டும். அரச நிறுவனங்கள் பொறுப்புடன்

நடந்து கொள்ளவேண்டும் -என்றுள்ளது. (எ-இ)

## இல்ல மெய்வன்மை

புதுக்குடியிருப்பு றோ.க. வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி, பாடசாலை மைதானத்தில் அதிபர் அருட்தந்தை றொபின்சன் ஜோசப் தலைமையில் இன்று புதன்கிழமை பி.ப. 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகத்தின் பிரதம கணக்காளர் கடம்பசோதி, சிறப்பு விருந்தினர்களாக புதுக்குடியிருப்பு கோட்டக்கல்விப் பணிப்பாளர் பாஸ்கரன், முல்லைத்தீவு கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் தம்பிஜயா மதியழகன், அருட்தந்தை ஜெயபாலன், கௌரவ விருந்தினர்களாக அருட்தந்தை அந்தோனிப்பிள்ளை, முல்லைத்தீவு மகாவித்தியாலய முன்னாள் பொருளாளரும், ஆசிரியருமான லோரன்ஸ் டெஸ்மன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ப)

## மணிவிழா

கொடிகாமம், மார்ச் 13

தென்மராட்சி ஆரம்பக்கல்வி அபிவிருத்திப் பிரிவு ஆசிரியர் குழாமின் ஏற்பாட்டில் கைதடி கலைவாணி வித்தியாலய ஆசிரியர் சி.சிவகாந்தன் தலைமையில் ஆசிரிய ஆலோசகர் அருணாசலம் மனோரஞ்சிதனின் மணிவிழா நிகழ்வு கொடிகாமம் ஏ-9 வீதியில் அமைந்துள்ள நட்சத்திர மஹால் மண்டபத்தில் இன்று புதன்கிழமை பி.ப. 2.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ப-159)

ஊர் ஆடுகள் வாங்கப்படும்
பட்டி வளர்ப்பிலுள்ள ஊர் ஆடுகள் மொத்தமாக வாங்கப்படும்.
தொடர்பு:- 077 866 0068
(CS/54287) J-1

காணி விற்பனைக்கு
G.P.S விளையாட்டரங்க வீதி கல்வியங்காட்டில் 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு:- 077 336 8601
CS/54343) J-1

விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி வசதிகள்
சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show money) வசதிகள்.
074 173 7684
(CS 28175) S-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 16 . 12 . 1953



மறைவு 10 . 03 . 2024

## கனகசுந்தரம் லலிதா

**(அன்னம் - தையல் ஆசிரியர்)**

காரைநகர் புதுறோட்டு மல்லிகையைப் பிறப்பிடமாகவும், பத்தர் கேணியடியை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசுந்தரம் லலிதா (அன்னம் - தையல் ஆசிரியர்) 10.03.2024 இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நவரட்ணம் (ஆசிரியர்) - தனபாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - அருளம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், கனகசுந்தரம் (ஓய்வு பெற்ற கட்டட மேற்பார்வையாளர்) அவர்களின் அன்பு மனைவியும், பாக்கியராசா (ஆசிரியர்), காலஞ்சென்ற ஸ்ரீகரலக்சுமி மற்றும் தருமராசா (M.G.R) காலஞ்சென்ற சாரதா மற்றும் கோகனதை (சுவிஸ்), நிர்மலாதேவி, அரிகரராசா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், தேவஜெனனி (ராஜி - கனடா), தேவரஜனி (ரஜனி - லண்டன்), காலஞ்சென்ற தேவரஜீவன் மற்றும் தேவசஞ்ஜீவன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவனேந்திரன் (கண்ணன் - கனடா), மனோகரன் (லண்டன்), அருந்தா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ஆறுமுகம், சண்முகம் ஆகியோரின் மைத்துனியும், ராகுல், லக்சுமி, கருன்யா ஆகியோரின் பேர்த்தியும், ஸர்வினி, சஞ்சனா ஆகியோரின் அப்பாச்சியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (14.03.2024) வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக சாம்பலோடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கணவர் - 0094 77 328 2202
மகன் - 0094 77 198 7528

(CS/54354) J-1



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.03.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org